
# சேலம் ஜில்லா

இது
விஜயநகரம் மகாராஜா காலேஜ் சரித்திர பண்டிதர்
**எம். எஸ். ராமசுவாமி அய்யங்கார், எம்.ஏ.,**
அவர்களால் எழுதப்பட்டது

9 JUL 1981

V2116
N31
59110

சர்வகலாசாலை ப்ரேஸ்
ாய் கல்கத்தா மதராஸ்



சேலம் நகர்.

ஜில்லா பூவர்ணனைச் சரித்திரங்கள்

# சேலம் ஜில்லா

9 - JUL 1931

இது

விஜயநகரம் மகாராஜா காலேஜ் சரித்திர பண்டிதர்

எம். எஸ். ராமசுவாமி அய்யங்கார், எம். ஏ.,

அவர்களால் எழுதப்பட்டது

ஆக்ஸ்பர்ட் சர்வகலாசாலை ப்ரேஸ்

பம்பாய் கல்கத்தா மதராஸ்

1931

## ACKNOWLEDGEMENT

The Publishers are grateful to Messrs. B. G. Paul & Co., Madras, for their kindness in according permission to reproduce the picture of Father Robert De Nobili in this book.

# பொருளடக்கம்


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஜில்லாவின் இயற்கை அமைப்பு | 1 |
| 2. | ஜனங்கள் | 6 |
| 3. | மதங்கள் | 11 |
| 4. | கல்வி | 18 |
| 5. | விவசாயம் | 19 |
| 6. | நீர்ப்பாய்ச்சல் | 22 |
| 7. | காடுகளும் அவைகளின் விசேஷமும் | 23 |
| 8. | தொழில் | 25 |
| 9. | போக்கு வரவு சாதனங்கள் | 27 |
| 10. | முக்கிய இடங்களும் அவைகளின் விசேஷமும் | 30 |
| 11. | ஜில்லா சரித்திரம் | 39 |
| 12. | ஜில்லா அரசாட்சி | 68 |

# சித்திரங்களும் படங்களும்


பக்கம்.

1. சேலம் நகர் (கடைவீதி) ... ... ... ... முகப்பு
2. டி நொபிலி பாதிரியார் ... ... ... ... 15
3. ஏர்க்காடு ... ... ... ... ... 32
4. ஹோகனகல் நீர்வீழ்ச்சி ... ... ... ... 37
5. திருமலை நாயக்கர்... ... ... ... ... 60
6. சேலம் ஜில்லாப் படம் ... ... ... ... இறுதி

# I. ஜில்லாவின் இயற்கை அமைப்பு

பீடிகை.—பிள்ளைகளே! நீங்கள் இந்தியாவின் படத்தைப் பாருங்கள். அது அநேக மாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மாகாணத்தையே ராஜதானியென்றும் சொல்வதுண்டு. மாகாணங்களுக்குள் பம்பாய், சென்னை, வங்காளம் முக்கியமானவை. நாம் சென்னை ராஜதானியில் இருக்கிறோம். இச்சென்னை ராஜதானியில் இருபத்தாறு ஜில்லாக்களிருக்கின்றன. அவைகளில் ஒன்று சேலம் ஜில்லா இந்த ஜில்லாவைப்பற்றிய அநேக விஷயங்களை நாம் இப்புத்தகத்தில் படிப்போம்.

எல்லைகள்.—நமது ஜில்லா கடற்கரையைச் சார்ந்ததல்ல. இதற்கு வடக்கில் மைசூர் தேசத்தைச்சேர்ந்த கோலார், பங்களூர் என்னும் ஜில்லாக்களும்; மேற்கில் கோயம்புத்தூர் ஜில்லாவும், தெற்கில் திருச்சினுப்பள்ளி ஜில்லாவும், கிழக்கில் வட ஆற்காடு தென் ஆற்காடு என்னும் ஜில்லாக்களும் எல்லைகளாக இருக்கின்றன.

இயற்கை அமைப்பு.—இந்த ஜில்லா இயற்கை அமைப்பை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். (I) பாலகாட்—இது இயற்கையில் மைசூர் பீடபூமியோடு சேர்ந்தது. மைசூரை ஒட்டியது. நமது ஜில்லாவில் வடக்கேயுள்ள ஹோசூர் தாலூகாவில் பெரும்பாகமும், அதற்குச் சற்று கிழக்கேயுள்ள கிருஷ்ணகிரி தாலூகாவின் சிறு பாகமும் இப்பாலகாட்டைச் சேர்ந்தவை. பீடபூமியாகையால் இப்பாகங்கள் கடல் மட்டத்

திற்குமேல் 3000 அடி உயர்ந்திருக்கின்றன. (2) பாராமஹால்—இது பாலக்காட்டுக்குத் தெற்கே பாலக்காட்டுக்கும் சமவெளியாயிருக்கும் இடங்களுக்கும் மத்தியில் இருக்கிற உயர்ந்த பிரதேசம். தர்மபுரி, ஊத்தங்கரை என்னும் தாலூகாக்களும், கிருஷ்ணகிரி ஹோசூர் என்னும் தாலூகாக்களின் சில பாகங்களும் பாராமஹாலுக்குள்ளடங்கியன. இப்பிரதேசம் கடல்மட்டத்திற்கு மேல் சராசரியில் சுமார் 1500 அடி உயர்ந்திருக்கிறது. இதற்கு பாராமஹால் என்று பெயர் வந்ததற்குக் காரணம், முன்னொருகால் இப்பிரதேசங்களை ஆண்ட ஜகதேவராயன் என்னும் அரசனுக்கு 12 குமாரர்கள் இருந்ததாகவும் ஆகையால் அவன் தன் நாட்டை 12 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு குமாரனுக்குக் கொடுத்ததாகவும், அதனால் இப்பனிரெண்டு பாகங்களடங்கிய பிரதேசத்திற்கு பாராமஹால் என்ற பெயர் வந்ததாகவும் சொல்லுகிறார்கள். பாரா என்றால் பன்னிரெண்டு. மஹால் என்றால் நாட்டின் பிரிவு அல்லது அரண்மனையென்று பொருள். (3) தலகாட்—இது சமவெளிபாகம்; முற்கூறிய தாலூகாக்கள் நீங்கலாக இதர தாலூகாக்கள் இப்பாகத்திலேயே இருக்கின்றன.

## மலைகள்

நமது ஜில்லாவில் மலைகளும், காடுகளும், பள்ளத்தாக்குகளும்மிகுதி. பள்ளத்தாக்கென்றால் என்ன? இரண்டு மலைகளுக்கு நடுவில் இருக்கும் பள்ளமான பாகத்தை பள்ளத்தாக்கு என்று சொல்லுகிறோம்.

தேவரபேட்டா.—இது பாலகாட்டிலிருக்கிறது. இதில்தான் சனத்குமாரநதி உற்பத்தியாகிறது.

மேலகிரி மலைகள்.—சனத்குமாரநதிக்கும் காவேரிக்கும் மத்தியிலுள்ள மலைகளுக்கெல்லாமே மேலகிரி மலைகள் என்று பெயர். இம்மலைகளைச் சேர்ந்த உன்னதமான குன்றுக்கு குத்திராயன் என்று பெயர்.

ராயக்கோட்டை மலைத்தொகுதி.—இவைகள் சனத்குமாரநதிக்கும் பெண்ணையாற்றிற்கும் இடையே உள்ளது.

அங்குசகிரி மலைகள்.—இவைகள் ஹோசூர் தாலூகாவிலிருக்கின்றன.

மகாராஜாக்கடை.—இந்த மலைக்கூட்டங்கள் நமது ஜில்லாவின் வடகிழக்கு மூலையில் கிருஷ்ணகிரி தாலூகாவிலிருக்கின்றன. இவைகளைத் தவிர பாராமஹாலுக்கு தெற்கேயும் கிழக்கேயும் அனேக தாழ்ந்த மலைகளிருக்கின்றன. இம்மலைகளுக்கு இடையே அநேக கணவாய்கள் இருக்கின்றன. இவைகளில் தோப்பூர், மல்லாபுரம், மஞ்சாவடி செங்கம கணவாய்கள் முக்கியமானவை.

சேர்வராயன் மலைகள்.—இவைகள் சேலம் தாலூகாவில் இருக்கின்றன. சேலம் ஜில்லாவில் இவைகளே பேர்பெற்றவை. இவைகளின் நீளம் 17 மைல் அகலம் 12 மைல். இம்மலைத்தொடர்ச்சியிலேயே ஏற்காடு இருக்கிறது. இதைப்பற்றிப் பின் ஒரு அத்தியாயத்தில் படிப்பீர்கள்.

கல்ராயன் மலைகள்.—இம்மலைத் தொடர்ச்சி ஆத்தூர், ஊத்தங்கரை ஜில்லாக்களில் பரவியிருக்கின்றது.

இனி வெளிப்பூமியாகிய தாலக்காட்டிலுள்ள மலைகளைப்பற்றிப் படிப்போம்.

கோல்லி மலைகள்.—இம்மலைப் பகுதிகளை நாமக்கல், ராசிபுரம் தாலூகாக்களில் காணலாம். இம்மலைகளில் மலையாளிகள் என்னும் ஒரு ஜாதியார் வசிக்கிறார்கள்.

நாமக்கல் தாலூகாவில் பச்சை மலையும் சேலத்திற்குத் தெற்கே 9 மைலில் போத மலையும் சேலத்திற்குத் தெற்கேயும் போதமலைக்கு வடக்கேயுமுள்ள ஜெருகு(த்தேன்) மலையும் சேலத்திற்குத் தென்மேற்கே ஐந்து மைலில் கஞ்சமலையும் திருச்செங்கோடு தாலூகாவில் உள்ள சங்ககிரியும் நமது ஜில்லாவிலுள்ள இதர மலைகள்.

## நதிகள்

நமது ஜில்லாவில் அநேக நதிகள் ஓடுகின்றன. இவைகளில் முக்கியமானது காவேரி நதி. இந்நதி நமது ஜில்லாவிற்கும் கோயம்புத்தூர் ஜில்லாவிற்கும் எல்லையாக இருக்கிறது. ஆயினும் இதன் நீர் நமது ஜில்லாவிலிருக்கும் ஜனங்களுக்கு விவசாயத்திற்குப் பிரயோஜனப்படுகிறதில்லை. ஏனென்றால் காவேரி ஓடும் தரை பள்ளமாகவும் சுற்றிலுமுள்ள பூமி மேடாகவும் அமைந்திருக்கிறது. நமது ஜில்லாவில் நான்கு ஆறுகள் உற்பத்தியாகி காவேரி நதியைச் சேருகின்றன. அவைகளே சனத்குமாரநதி, கோள்ளிகால், பாலாறு, தோப்பூர்நதி, பவானிநதி என்பவை.

சனத்குமார நதி.—இதற்குச் சின்னாறு யென்று மற்றொரு பெயர். இது ஹோசூர் தாலூகாவில் ஒரு சுனையில் உற்பத்தியாகிறது. இது ஹோசு

னேக்கல் என்னும் நீர்வீழ்ச்சிக்கு அருகே காவேரி யைச் சேருகிறது.

தோப்பூர் நதி.—இதற்கு வேப்படியாறு என்று மற்றொரு பெயர். இது சேர்வராயன் மலையில் உற்பத்தியாகி மல்லாபுரம் வழியாகச்சென்று தர்ம புரியைச் சேர்ந்த சோலப்பாடிக்கருகில் காவேரி நதியைச் சேருகிறது.

சரபங்கநதி.—ஓமலூர் தாலூகாவில் கிழக்கு நதி மேற்கு நதி என்ற இரு சிறு ஆறுகள் ஒன்ருய்ச் சேருகின்றன. இப்படி ஒன்றுசேர்ந்த நதிக்கே சரபங்க நதியென்று பெயர். இந்நதி ஓமலூர் திருச்சங்கோடு என்னும் தாலூகாக்களின் வழி யாய்ச் சென்று காவேரி நதியில் விழுகிறது.

திருமணி முத்தாறு—சரபங்க நதியைப்போ லவே இதுவும் இரண்டு நதிகள் ஒன்றுகூடியதால் ஏற்பட்டது. இது சேலத்திற்கருகில் உற்பத்தியாகி நாமக்கல் தாலூகாவில் காவேரியை அடைகிறது.

வசிஷ்டநதி.— இது ஆத்தூர் தாலூகாவில் உற் பத்தியாகி வட ஆற்காடு ஜில்லாவின் வழியாகப் போகிறது.

சுவேதநதி.—இதுவும் ஆத்தூர் தாலூகாவில் உற்பத்தியாகி வசிஷ்ட நதியைப்போலவே வட ஆற்காடு ஜில்லாவின் வழியாய்ப் போகிறது. ஆத் தூர் தாலூகாவின் வளப்பத்திற்கு இந்நதிகளே காரணம்.

பெண்ணையாறு.—இது நமது ஜில்லாவில் பெரிய ஆறு; மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த நந்தி துர்க்கத் தில் உற்பத்தியாகி ஹோசூர் தாலூகாவில் தென் கிழக்காய் ஓடி தென் ஆற்காடு ஜில்லாவில் பிரவே சிக்கிறது. இதன் உபநதிகளாவன: மார்க்கண்ட நதி, கம்பயநல்லூர் ஆறு, பாம்பாறு, வாணியாறு.

## II. ஜனங்கள்

நமது ஜில்லாவின் விஸ்தீரணம் 6912 சதுர மைல். இதில் 10 பட்டணங்களும் 2293 கிராமங்களும் அடங்கியிருக்கின்றன. 1921 வருஷத்தில் எடுத்த ஜனத்தொகைக் கணக்கின்படி நமது ஜில்லாவில் 2,112,034 ஜனங்களிருக்கிறார்கள். இவர்களில் 2,049,452 பேர்கள் ஹிந்துக்கள், 47,175 பேர்கள் முகம்மதியர்கள், 28,308 பேர்கள் கிறிஸ்துவர்கள். நமது ஜில்லாவில் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்துஸ்தானி, பட்னூலி அல்லது கத்திரி என்னும் பாஷைகள் பேசப்படுகின்றன. ஆனால் பெரும்பான்மை ஜனங்கள் தமிழையே பேசுகிறார்கள்.

ஜாதிகளின் பிரிவு.—பொதுவாக நமது ஜில்லாவிலிருக்கும் ஜனங்களை பிராமணர்களென்றும் பிராமணர்கள் அல்லாத இதரர்களென்றும் பிரிக்கலாம். பிராமணர்களல்லாதவர்களை அவரவர்கள் செய்யும் தொழில்களைக்குறித்து வெவ்வேறு ஜாதிகளாய்க் குறிப்பதே நன்றாம். இத்தொழில்களாவன: (1) உழுது பயிர் செய்வோர் (2) ஆடு மாடு மேய்ப்போர் (3) மீன் பிடிப்போர் (4) வேடர் (5) வியாபாரம் செய்வோர் (6) தொழில்செய்து ஜீவனம் செய்வோர் (7) கூலிவேலை செய்வோர் (8) சிற்றேவல்கள் செய்வோர் (9) பட்டாளத்தைச் சேர்ந்தோர்.

பிராமணர்கள்.—இவர்களைப்பற்றி உங்களுக்கு ஏற்கெனவே தெரியும். கிருஷ்ணகிரி தாலூகாவில் கோல்கொண்டா வியாபாரிகள் என்னும் ஒரு வகைப் பிராமணக்கூட்டத்தார் இருக்கிறார்கள். இவர்கள் எங்கிருந்து நமது ஜில்லாவிற்கு வந்தார்

களென்று உங்களில் அநேகருக்குத் தெரியாது. இவர்கள் தக்ஷிண பீடபூமியினின்றும் பாரா மஹாலுக்கு ஜெகதேவ ராயரோடு கூடவந்தார்கள். பிறகு பாராமஹாலே அரசாண்ட ஒவ்வொருவர்களிடத்தும் விஸ்வாஸமாய் வேலைபார்த்து வந்தார்கள். அதனால் இவர்கள் பூமியையும் அந்தஸ்துள்ள உயர்ந்த வேலைகளையும் அடைந்தார்கள். இவர்கள் நியோகித் தெலுங்குப் பிராமணர்களின் ஒரு கிளையெனக் கருதப்படுகிறார்கள். இவர்களுக்கு வியாபாரி என்று பேர்வந்ததற்கு ஒரு காரணம் உண்டு. முகம்மதியர்கள் வடக்கிலிருந்து ஹிந்து ராஜ்யங்களைச் சின்னாபின்னப் படுத்தியபொழுது இவர்களே ஹிந்து ராஜாக்களினுடைய பொக்கிஷங்களைப் பத்திரப்படுத்தி வியாபாரிகளாய் வேடந்தரித்து தெற்கு தேசங்களுக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்களாம். இவர்கள் எல்லாருமே வைஷ்ணவ சமயத்தவர்.

I. பிராமணரல்லாதவர்கள்.—உழுது பயிர் செய்வோர். நமது ஜில்லாவில் வேளாளர், வன்னியர் (பள்ளிகள்), நாட்டான், உடையான், வெட்டுவன், மலையாளிகள், ரெட்டிகள் என்று சொல்லப்படுகிறவர்களே உழுது ஜீவனம் செய்கிறார்கள்.

(1) வேளாளர்கள்.—இவர்கள் தமிழ்க் குடிகளில் மிகவும் உயர்ந்தோர். ஆதிகாலத்தில் இவர்கள் காஞ்சிபுரத்தருகில் குடியேறினார்கள். பின்பு அநேக அரசர்களால் அழைக்கப்பட்டு சோழ, சேர, பாண்டிய தேசங்களுக்குச் சென்றார்கள். நமது ஜில்லாவிலிருக்கும் வேளாளர்களுக்குள் அநேக பிரிவுகளிருக்கின்றன. அவைகளாவன: (1) கொங்கு வேளாளர், (2) வெள்ளிக்கை வேளாளர், (3) பவழக்கட்டி வேளாளர்,

(4) தொண்டைமண்டலம் வேளாளர், (5) துளுவ வேளாளர், (6) நீறுபூசி வேளாளர், (7) நாயஞர் வேளாளர், (8) பூசைக்கார வேளாளர், (9) காரைக்கட்டு வேளாளர், (10) சோழிய வேளாளர். இவர்களில் கொங்கு வேளாளர்களே தொகையில் மிகுதியாயிருக்கிருர்கள்.

(2) பள்ளி.—நமது ஜில்லாவில் சுமார் 4,93,271 பள்ளிகள் இருக்கிருர்கள். இவர்கள் தங்களை வன்னியர்கள் என்று சொல்லுகிருர்கள். வன்னியர் என்ருல் வன்னிச்செடியை வணங்குகிறவர்கள் என்று பொருள். இவர்களுக்குள்ளும் அநேக பிரிவுகள் உண்டு. அவைகளாவன: (i) பண்டமுட்டு வன்னியர். (ii) அரச வன்னியர். (iii) ஓலேவன்னியர். (iv) நாகவடம் வன்னியர்.

(3) நாட்டான்.—இவர்கள் கொங்கு வேளாளர்களின் ஒரு கிளையாவார்கள்.

(4) உடையான்.—இவர்கள் பேர்போன ஒளவையார் எடுத்து வளர்த்த மூன்று கன்னிகைகளின் மூலம் வந்தவர்களாம். இவர்களில் மூன்று வகுப்பிருக்கின்றன. அவையாவன: மலேமான், நட்டமான், சுடர்மான் என்பவைகளாம். மலேமான் உடையார்களில் அனேகர் கிறிஸ்துவ மார்க்கத்தைத் தழுவிவிட்டார்கள்.

(5) வேட்டுவன்.—இந்த ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குக் குலமுதல்வன் காளஹஸ்தி ராஜாவாகிய முத்தனி ராஜாவாம். வெட்டுவர்களைக் கேட்டால் அவர்கள் தாங்கள் சைவ நாயஞர்களில் ஒருவராகிய கண்ணப்பநாயஞரின் பேரஞகிய முத்தனி ராஜாவின் வம்சத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லுகிருர்களாம்.

(6) மலையாளிகள்.—இவர்கள் தலைக்காட்டு மலைகளில் வாசஞ்செய்கிறார்கள். முக்கியமாய் சேர்வராயன் கல்ராயன் கொல்லிமலை, பச்சைமலை முதலிய மலைகளில் இவர்களைக் காணலாம். இவர்கள் ஆதியில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்களாம். பிறகு தெற்கே புறப்பட்டு வந்தார்கள். இவர்களுக்குள் மூன்று பிரிவுகளைக் காணலாம். அவர்களில் கொல்லி மலையாளிகளே பேர்போனவர்கள். இவர்களுக்குள் ஜாதிக்கட்டு மிகுதி. இவர்கள் நாமக்கல் ஆத்தூர் என்னும் தாலூகாக்களில் கூட்டங்கூட்டமா யிருக்கிறார்கள். மலையாளிகள் விஷ்ணுவையும் சிவனையும் ஆராதித்தாலும் இவர்களுக்கு கரிராமன் என்னும் தெய்வமே குலதெய்வம்.

(7) ரெட்டிகள்.—இவர்கள் தெலுங்கு பேசும் குடியானவர்கள். இவர்களை சுவேத நதிதீரத்தில் ஏராளமாய்க் காணலாம். உழைப்புக்குச் சிறிதுகூட அஞ்சாமல் தரிசல் நிலங்களை பொன் விளையும் இடங்களாக ஆக்கிவிடுவார்கள்.

II. ஆடுமாடு மேய்க்கிறவர்கள்.—ஆடுமாடுகளை மேய்த்து அவைகளின் மூலம் ஜீவிக்கிறவர்கள் தமிழ் இடையர்களும் கன்னடக் குறும்பர்களும் தெலுங்கக் கோல்லர்களுமாம். குறும்பர்களில் மூன்று வகுப்பு இருக்கின்றன. சிலரை ஹோலை அல்லது புதுக்குறும்பர் என்றும், சிலரை ஹாலி அல்லது கம்பளிக் குறும்பரென்றும், சிலரை அந்திக் குறும்பரென்றும் சொல்லுகிறோம். புதுக்குறும்பர் பால் தயிர் முதலியவைகளை விற்பனைக்குக் கொண்டுவருவார்கள். கம்பளிக் குறும்பர் ஒருவிதமான கரடுமுரடான கம்பளியை நெய்வார்கள். அந்திக் குறும்பர் சண்டை செய்வதில் பேர்போனவர்கள்.

III. மீன் பிடிப்பவர்கள்.—செம்படவன் இந்த ஜாதியைச் சேர்ந்தவன். இவர்களில் அநேகர் மீன்பிடிப்பதை விட்டு வியாபாரம் செய்தும், விளக்கெண்ணை ஆட்டியும் புண்ணாக்கு விற்றும் ஜீவனம் செய்கிறார்கள்.

IV. வர்த்தகம் செய்கிறவர்கள்.—வைசிய குலத்தைச்சேர்ந்த அநேக ஜாதிகள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களே கோமுட்டிகள், பேரி செட்டிகள், நகரத்துச் செட்டிகள், ஜனப்பர்கள், பலிஜர்களுமாம். இவர்களைப்பற்றி விபரமாய் எழுதினால் பக்கம் பெருகும்.

V. தொழிற்செய்து ஜீவனம் செய்வோர்.—(1) நெசவுதொழில்:—நமது ஜில்லாவில் ஆடைகள் நெய்து ஜீவனம் செய்வோர்களில் கைக்கோளராகிய செங்குந்தரும் தேவாங்கர்களும் முக்கியமானவர்கள். சேலம் ஜில்லாவில் 50,439 கைக்கோளர்கள் இருக்கிறார்கள். தேவாங்கவகுப்பைச் சேர்ந்தவர்களின் தொகை 41,543. (2) இதரதொழில்கள்:—சேலம் ஜில்லாவில் மற்ற ஜில்லாக்கள் போலவே வாணியர்களும் குசவர்களும், மரமேறும் நாடார்களும் உப்புக்களத்தில் வேலைசெய்யும் உப்பிலியன்களும் மூங்கில்பாய் கூடை முதலியன மேயும் வேடக்காரன்களும், தச்சவேலைசெய்யும் கம்மாளர்களும் ஒட்ரதேசத்தினின்று வந்து குடியேறி சிறுதொழில் செய்யும் ஒட்டர்களும் இருக்கிறார்கள்.

மேலும் விஷ்ணு கோயில்களில் கைங்கரியம் செய்து ஜீவிக்கும் சாத்தாணிகளையும், ஜில்லாவில் அநேக பாகங்களில் காவல் காத்துவரும் குரவர்களையும், நீண்ட கிளைகளில் ஏறிக் கூத்தாடி உங்களை உற்சாகப்படுத்தும் தொம்பக் கூத்தாடி

களையும், ஊரெங்கும் அலைந்து நாட்டுப்புறத்தி லிருக்கும் ஜனங்களை பயந்தோட அடிக்கும் லம் பாடிகளையும், அநேக மூலிகைகளையும் மெழுகு தேன் முதலியவைகளையும் காடுகளில் தேடி நமக்குச் சந்தையில் விற்கும் காட்டுப் பூசாரியாகிய இருளனையும், செருப்புத் தைக்கும் சக்கிலியனையும், நமது ஜில்லாவில் நீங்கள் பார்த்திருக்கலாம்.

## III. மதங்கள்

இந்த அத்தியாயத்தில் நமது ஜில்லாவில் வழங்கும் மதங்களைப்பற்றி விசாரிப்போம்.

ஆதிகாலத்தில் சேலம் ஜில்லாவில் வசித்திருந்த குடிகள் நாகரீகமற்று நாகத்தையும் மரங்களையும் வணங்கி வந்தார்கள். ஆனால் சேரசோழர்கள் நமது ஜில்லாவில் அநேக பாகங்களைக் கைக்கொண்ட பிறகு தமிழருடைய நாகரீகம் இந்நாட்டிலும் பரவியது. சிலகாலஞ் சென்றபின் ஆரியப்பிராமணர்கள் தமிழ் நாட்டிற் புகுந்துகொண்டார்கள். ஆகவே ஆரியமதம் தமிழ் நாட்டில் வேரூன்றிவிட்டது.

ஜைனமதம்.—ஆரியர்கள் தென்னிந்தியாவிற்கு வந்த கொஞ்சகாலத்திற் கப்பால் ஜைனர்களும் வந்தார்கள். ஜைனர்கள் ஒருவித மதஸ்தர்கள். இவர்கள் தீர்த்தங்கரர்கள் என்னும் 24 மகா புருஷர்களை வணங்குகிறார்கள். ஜைனமதத்தை ஸ்தாபித்தவர் மஹாவீரர். நமது ஜில்லாவில் சில பாகங்களில் கங்கையர்களும் ஹோயசல்யர்களும் அரசாண்டார்கள். இவர்களில் அநேகர் ஜைன மதத்தைத் தழுவினார்கள். தற்காலத்தில் நமது ஜில்லாவில் ஜைனர்கள் கிடையாது. ஆனால்

சமீபத்திலுள்ள வட ஆற்காடு ஜில்லாவில் அநேக ஜைனர்கள் இருக்கிறார்கள்.

சைவமதமும் விஷ்ணுமதமும்.—நமது ஜில்லாவில் சிவமதஸ்தர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். சேலம் ஜில்லாவிலிருக்கும் பெரிய ஆலயங்கள் சிவனுக்குரியவைகளே. அதமன்கோட்டை, ராயகோட்டை, இந்தூர், கிருஷ்ணகிரி முதலிய இடங்களில் சிவனை சோமேஸ்வர ரூபமாகக் கொண்டாடுகிறார்கள். ராசிபுரம், திருச்செங்கோடு, தாரமங்கலம் முதலிய ஊர்களில் சிவனை கைலாசநாதரென்று சொல்லுகிறார்கள். இவரையே சோமீஸ்வரனென்றும் பாண்டீஸ்வரனென்றும் சில இடங்களில் சொல்வதுண்டு. எல்லாருமே கணபதி பூஜை செய்கிறார்கள்.

சிவனைப்போலவே விஷ்ணுவிற்கும் அநேக திருநாமங்கள் உள. இத்திருநாமங்களை அநுசரித்து நமது ஜில்லாவிலிருந்த விஷ்ணுபக்தர்கள் அநேக கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள். சில கோயில்கள் மலைஉச்சியின்மேல் கட்டப்பட்டிருக்கின்றன. ஆத்தூர், இந்தூர், காவேரிப்பட்டணம் முதலிய ஊர்களில் விஷ்ணு வெங்கட்ரமண அவதாரமாய் இருக்கிறார்; கிருஷ்ணகிரி, நங்கவல்லி, ஹாலிதர்மபுரம் முதலிய ஸ்தலங்களில் நரசிம்மாவதாரமாய் இருக்கிறார். இவ்ரே வரதராஜராய், தாரமங்கலம், பாபாரப்பட்டி என்னும் ஊர்களிலும், வேணுகோபாலராய் மேலூரிலும், லெக்ஷிமி-நாராயணராய் காரமங்கலம், ராயகோட்டை என்னும் இடங்களிலும் எழுந்தருளியிருக்கிறார்.

அநுமார்.—அநேக ஜனங்கள் ஹநுமாரையும் வணங்குகிறார்கள். ஹநுமார் விஷ்ணு தூதரல்

லவா? இவர் கோயில்களை பாராமஹாலல், பால காட் என்னும் பிரிவுகளில் விசேஷமாய்க் காண லாம்.

பஞ்சபாண்டவர்கள் கோயில்.—வன்னிஜாதி யைச் சேர்ந்தவர்களே பஞ்சபாண்டவர்களையும் அவர்கள் பத்தினியாகிய துரௌபதியையும் வணங்குகிறார்கள். பங்குனிமாத நடுவில் பாரதச் செய்திகளில் சிலவற்றை இவர்கள் நாடக ரூபமா யும் நடிப்பார்கள்.

காமன்பண்டிகை.—அநேகர் மன்மதனுக்கா கத் திருவிழா நடத்துவார்கள். இதற்கே காமன் பண்டிகையென்று சொல்லப்படுகிறது.

வீரசைவர்கள்.—இவர்களையே லிங்கதாரிகள் என்று சொல்லுவது. நமது ஜில்லாவில் 12,657 லிங்கதாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் சிவனை வீரபத்ரரூபமாய் வணங்குகிறார்கள். மாமிஸபோ ஜனத்தை உண்ணமாட்டார்கள். இவர்களில் அநேகர் கழுத்தில் ஒரு லிங்கத்தைத் தொங்கவிட் டுக்கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

கிராமதேவதைகள்.—கிராமதேவதைகளுக்குள் ஐயனார் முக்கியம். இவரை தலைக்காட்டுத் தாலூ காக்களிலும், ஆத்தூர் தாலூகாவிலும் கொண் டாடுகிறார்கள். ஐயனார் சிவனுக்கும் விஷ்ணு அவதாரமாகிய மோகினிக்கும் பிறந்ததெய்வமாம்!

சக்திபூஜை.—சாதாரண ஜனங்களுக்கு சக்தி பூஜையின் தாத்பர்யம் தெரியமாட்டாது. சக்தி என்பது "லோகமாதாவாகிய சங்கரி". நமது ஜில் லாவிலுள்ள கிராமஜனங்கள் ஹிந்துமத சாஸ்த் திரத்திற் கூறியபடி ஒன்பது விதமான சக்தியை யும் ஒன்பது தெய்வங்களாக வணங்குகிறார்கள். அவைகளாவன: (1) மாரியம்மன், (2) எல்லம்

மன், (3) அங்காலம்மன், (4) பிடாரி, (5) சாமுண்டி, (6) பத்தரகாளி, (7) துர்க்கை, (8) பூர்ணை, (9) புத்கலை. மேற்கூறியவைகளைத் தவிர மற்றும் சில சில்லரைத் தெய்வங்களையும் ஆராதிக்கிறார்கள். அவைகள்தான், செல்லியம்மன், நாச்சியம்மன், கங்கம்மா, படவட்டம்மன், பொன்னம்மன், பொங்கலம்மன், முத்தியாலம்மன்.

நாட்டுப்புறத்திலிருக்கும் சில ஜனங்கள் அநேக பூதங்களையும் பிசாசங்களையும் ஆதரித்து வருகிறார்கள். இவர்களில் முனியப்பனையும், மதுரைவீரனையும் நீங்கள் மறக்கக்கூடாது. சேலம் ஆத்தூர் தாலூகாக்களில் சந்தியப்பன் என்ற ஒரு தெய்வமுமுண்டு.

## முகம்மதிய மதம்

இந்த மதத்தை கி. பி. ஏழாவது நூற்றாண்டில் பெரிய மகானாகிய முகம்மது ஸ்தாபித்தார். நமது ஜில்லாவில் 100-க்கு சுமார் 3 பேர் முகம்மதியர்கள். இவர்கள் தெங்கணிக்கோட்டை, ஹோஸூர், கிருஷ்ணகிரி, கேளமங்கலம் முதலிய இடங்களிலேயே மிகுதி. நமது ஜில்லாவிற் காணப்படுகிற முகம்மதியர்களில் அநேகர் துருக்க சேனைகளோடு வந்தவர்கள். இதரர்கள் ஹிந்து மார்க்கத்தை விட்டு முகம்மதிய மதத்தைத் தழுவியவர்கள். முகம்மதியர்களில் சிலர் தமிழ்ப் பேசுகிறார்கள். இவர்களை லப்பைகள் என்று சொல்லுகிறோம். இவர்கள் மிகுந்த யோக்கியதை பெற்று வியாபாரம் செய்துவருகிறார்கள்.

நமது ஜில்லாவில் முகம்மதியர்கள் கொண்டாடும் திருவிழாக்களாவன: (1) ரம்சான், (2) பக்ரீட், (3) முகரம். சேலம் டவுனில் முகரத்திற்



டி நொபிலி பாதிரியார்.

காக சிறுவர்கள் வேஷந்தரித்து விளையாடுவது பார்க்க விநோதமாயிருக்கும்.

### கிறிஸ்தவர்கள்

நமது ஜில்லாவில் 15,375 கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களை "காதோலிக்", 'புராட்டெஸ்டெண்டு' என்று இருவகையாகப் பிரிக்கலாம். 'காதோலிக்ஸ்' என்பவர்கள் ரோமாபுரியிலிருக்கும் போப்பை வழிபட்டு வருகிறவர்கள். காதோலிக் மதத்தின் ஸித்தாந்தத்தை மறுத்து புதியஸித்தாந்தத்தை ஸ்தாபித்து அதவ் வழி நடப்பவர்களே 'புராட்டெஸ்டெண்டுஸ்.'

காதோலிக்மதம்.—இம்மதம் நமது ஜில்லாவிற் பரவிய விருத்தாந்தத்தைப்பற்றி சற்று கவனிப்போம்.

ஸெயிண்டு பிரான்சிஸ் ஸேவியர் என்னும் பெரிய மகான் கி.பி. 1540-ல் நமது தேசத்திற்கு கிறிஸ்தவ மதத்தைப் பரவச்செய்ய முதலில் வந்தார் அவருக்குப் பிறகு இயேசு சங்கத்தைச் சேர்ந்த அநேக பாதிரிகள் தென்னிந்தியாவிற்கு வந்தார்கள். இவர்களில் முக்கியமானவர் பேர்பெற்ற ராபர்ட்-டி-நோபிலி. இவர் கிறிஸ்தவ மதத்தை இந்தியாவில் பரவச்செய்ய வேண்டுமென்று கருதித் தன் ஆஸ்தி அந்தஸ்து எல்லாவற்றையும் கவனியாமல் தமிழ் தேயங்களிலேயே உழைத்து வந்தார். இவர் முதலில் மதுரை ஜில்லாவில் பிரசங்கம் செய்துவந்தார். கி.பி. 1632-ல் சேலம் ஜில்லாவிற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது நமது ஜில்லா திருமலை நாயக்கரால் ஆளப்பட்டது. சேலம் நகருக்கு வந்த நொபிலியை யாவரும் மதிக்கவில்லை. தங்குவதற்கு வீடுகூட இவருக்

குக் கிடைக்கவில்லை. மழையிலும் வெய்யலிலும் இவர் நனைந்து காய்ந்து தைரியத்தை விடாமல் இயேசு பக்தியிலே மூழ்கிவிட்டார். இவர் கஷ்டங்களை நோக்கிய ஜனங்கள் இவர் பக்தியைப் பற்றி வியந்து இவரோடு சிநேகிதங் கொண்டாட ஆரம்பித்தார்கள். மதுரை திருமலை நாயக்கருக்காக சேலத்தை ஆண்ட சலபதி நாயக்கனும் நொபிலியைப்பார்க்க விரும்பி, அவருக்கு வேண்டுமளவு உபகாரம் செய்தான். நாளடைவில் நொபிலி உயர்குலத்திற்பிறந்த அநேகரையும், சில செல்வாக்குள்ள நாயக்கர்களையும் கிறிஸ்தவ மதத்தில் சேர்த்துவிட்டார். இது முதற்கொண்டே சேலம் ஜில்லாவில் இம்மதம் வேரூன்றிவிட்டது. நொபிலி கி. பி. 1656-ல் 80-வது வயதில் காலஞ்சென்றார்.

கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு மத்தியில் கிறிஸ்தவமதம் தென்னிந்தியாவில் தழைத்தோங்கிநின்றது. ஆனால் கி. பி. 1770-ல் 'கிறிஸ்தவ சங்கத்தை' (Society of Jesus) க் கலைத்துவிட்டார்கள். இதற்குள் ஹைதர் ஆலியின் குமாரனை டிப்புவும் பட்டத்திற்கு வந்துவிட்டான்.

டிப்புவும், கிறிஸ்தவமதமும்.—டிப்பு கிறிஸ்தவ மதத் துவேஷி. அவன் முகம்மதிய மதத்தில் சேராதவர்களை கத்திக்கிரையாக்கினன். நமது ஜில்லாவிலிருக்கும் கிறிஸ்தவ கோயில்களைப் பொடியாக்கிவிடும்படி கட்டளையிட்டான்.

அபிடுபோய் (Abbe Dubois).—ஆனல் டிப்பு மூன்றாவது மைசூர் யுத்தத்தில் தோல்வியடைந்தான். கிறிஸ்தவ பாதிரிகளும் தைரியமடைந்து நமது ஜில்லாவிற்கு வர ஆரம்பித்தார்கள். இவர்களில் அபிடுபோய் என்னும் பிரான்ஸ்தேச சிகா

மணி பேர்போனவர். இவர் பாராமஹால், சேலம் முதலிய இடங்களில் உள்ள கிறிஸ்தவர்களுக்குத் தலைவரானர். இவர் இந்துக்களைப் பழிக்காமல் அவர்களுடைய பழக்க வழக்கங்களை மிகவும் மெச்சினர். இந்து ஸ்திரீகளின் பதிவிர்தா தர்மத்தைப்பற்றி எப்பொழுதும் புகழ்ந்துகொண்டிருப்பார். இவர் 'இந்து பழக்கவழக்கங்கள்' என்னும் ஒருகிரந்தத்தை எழுதியுள்ளார். இதைப் படித்துப் புகழாதவர்கள் ஒருவருமே யில்லை.

லண்டன் மிஷன்.—கி. பி. 1827-ல் இந்த பாதிரிச்சங்கத்தைச் சேர்ந்த இரண்டு புராட்டெஸ்டெண்டு பாதிரிகள் நமது ஜில்லாவிற்கு வந்து மதப்பிரசங்கம் செய்தார்கள். ஆனால் கி. பி. 1862 முதற்கொண்டேதான் இந்த மிஷன் வலுக்க ஆரம்பித்தது. கி. பி. 1907-ல் இம்மிஷனைச் சேர்ந்த பாதிரிகள் சேலம் ஆத்தூர் பள்ளத்தாக்கில் இருக்கும் குறவர்களை நல்வழிப்படுத்தியும் சீர்திருத்தியும் வரும்பொருட்டு நிலங்களை தர்காஸ்துவாங்கி அவர்களை நாகரீகத்திற்கு கொண்டுவந்தார்கள்.

லியூதர் மிஷன்.—இம்மிஷனைச் சேர்ந்தவர்களும் புராட்டெஸ்டெண்டு மதத்தைச் சேர்ந்தவர்களே. 16-ம் நூற்றுண்டில் ஜெர்மனியில் மார்ட்டின் லியூதரால் ஏற்படுத்தப்பட்ட மார்க்கத்தில் இவர்கள் சேர்ந்தவர்கள். நமது ஜில்லாவிற்கு இம்மிஷனைச்சேர்ந்த பாதிரி கி. பி. 1895-ல் வந்து மதப்பிரசங்கம் செய்தார். இப்பொழுது இம்மிஷனைச்சேர்ந்த பாதிரிகள் ஆம்பூரிலும், வாணியம்பாடியிலும், கிருஷ்ணகிரியிலும் இருக்கிறார்கள். மேற்கூறியவைகளைத் தவிர இரண்டுமிஷன் கிளைகள் சேலம் ஜில்லாவிலிருக்கின்றன. இவற்

றில் ஒன்று லிப்சிக் லியூதரன் மிஷன், மற்ருென்று டேனிஷ் மிஷன்.

## IV. கல்வி

படிப்பின் நிலைமை.—நமது ஜில்லாவில் 2, 112, 034 ஜனங்களிருக்கிருர்களென்று முன் ஒரு அத்தியாயத்தில் சொன்னேம். இவர்களில் 102,293 பேர்களுக்கே எழுதப் படிக்கத் தெரியும். இது விசனிக்கத்தக்கதே. மொத்த ஜனத்தொகையில் 1921-ம்வூ எடுத்த ஜனத்தொகைக் கணக்கின்படி 8045 பேருக்கே ஆங்கில பாஷை நன்ருய்த் தெரியும்.

உயர்தரக் கல்வியை விரும்புவோருக்கு நமது ஜில்லாவில் இப்பொழுது அநேக கலாசாலைகள் உள. சேலம் டவுனில் முனிசிபாலிடியாரால் ஒரு 2-வது கிரேட் காலேஜும் ஒரு ஹைஸ்கூலும் நடத்தப்பட்டு வருகின்றன. அதே ஊரில் லண்டன் மிஷனைச் சேர்ந்தவர்கள் ஒரு ஹைஸ்கூலை ஏற்படுத்தியிருக்கிருர்கள். இவைகளைத் தவிர நான்கு ஹைஸ்கூல்கள் ஜில்லாபோர்டாரால் முறையே நாமக்கல், திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி என்னுமிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ராசிபுரம், ஹோசூர், காவேரிப்பட்டணம், ஆத்தூர் என்னுமிடங்களில் ஜில்லா போர்டாரால் ஸ்தாபிக்கப்பட்ட மேல்வகுப்புகள் வைக்கப்படாத ஹைஸ்கூல் (Incomplete Secondary School) களும் உள. பெண்பிள்ளைகளுக்காக சேலத்தில் ஒரு செகண்டரி ஸ்கூலும் உண்டு. ஆங்கிலச் சிறுவர்களுக்கென்றே ஏர்க்காட்டில் ஒரு ஹைஸ்கூல்

இருக்கிறது. இதற்கு மாண்டுபோர்டு பாய்ஸ் ஹைஸ்கூல் என்று பெயர்.

மேற்சொல்லியவைகளைத் தவிர சிறுவர்களும் சிறுமிகளும் முதல் முதல் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களைப் போதிக்கும் பாலபோத பாடசாலைகள் அல்லது எலிமெண்டரி பள்ளிக்கூடங்களும் அநேகம் நமது ஜில்லாவில் இருக்கின்றன.

உபாத்தியாயர்களுக்கு போதனுமுறைகள் போதிக்க ஒரு போதனுமுறைப் பயிற்சிசாலை சேலம் நகரில் இருக்கின்றது.

## V. விவசாயம்

நமது ஜில்லாவில் ஜனங்கள் முக்கியமாய் விவசாயம்செய்தே ஜீவிக்கிருர்கள். உழுது பயிரிடக்கூடிய இடங்கள் எங்கிருந்தாலும் அங்கே குடியேறி விவசாயம் செய்துவருகிருர்கள். நமது ஜில்லாவில் சிலபாகங்கள் ஜமீன்தார்களுக்குச் சொந்தம். அவர்களுக்குரிய நிலங்களை உழுது பயிர் செய்கிறவர்கள் அந்த ஜமீன்தார்களுக்கே நிலவரியைச் செலுத்துகிருர்கள். சில நிலங்கள் ஆதிகாலத்தில் தர்மசாஸனமாக பிராமணர்களுக்கோ அல்லது பிறர்களுக்கோ கொடுக்கப்பட்டன. இந்நிலங்களுக்கு வரி சொற்பம். விவசாயம் செய்வோர்களில் பலர் சர்க்காருக்கு நேராகவே தங்கள் வரிகளைச் செலுத்துகிருர்கள். இந்த நிலங்கள் 'ரயட்வாரி நிலம்' என்று சொல்லப்படுகின்றன.

பூமியும், செல்வமும்.—ஒரு நாட்டின் செல்வம் பூமியைப் பொறுத்தது. பூமி செழிப்பாயும் நீர் வசதி மிகுதியாயும் இருந்தால் அந்நாடு செழிப்புள்ளதாக யிருக்கும். அங்கே வசிக்கும் ஜனங்க

ளும் மிக்க நாகரீகமடைந்திருப்பார்கள். நீர்வசதி குறைந்து பூமியும் கல்தரையாயிருந்தால் அந்த ஊரில் ஜனங்கள் ஏழையாயிருப்பார்கள். பூமியின் வளப்பத்துக்குத் தக்கவாறு தான்யங்கள் விளைகின்றன. விளைபொருள்களைப்பற்றிக் கவனிக்குங்கால் நாட்டின் சீதோஷ்ணஸ்திதியைப் பற்றி விசாரிக்கவேண்டும். உதாரணமாக நெல் பயிரிடும் நாட்டில் உஷ்ணமும் மழையும் அதிகமாகவேண்டும். கோதுமை பயிரிடுவதற்கு உஷ்ணம் கூடாது குளிர்ச்சியான மலையிலும் மலையின் அடிவாரத்திலும் காபி, தேயிலைத்தோட்டங்களை வைத்துப் பயிரிடலாம். இந்த அத்தியாயத்தின்கீழ் நமது ஜில்லா விளைபொருள்களைப் பற்றிப் படிப்போம்.

நெல்.—நமது ஜில்லாவில் புன்செய்ப் பயிரே முக்கியமாயிருக்கிறது. ஆனாலும் நீர்வசதியுள்ள சேலம், ராசிபுரம், ஆத்தூர், நாமக்கல் என்னும் தாலூகாக்களில் கார்நெல், சம்பாநெல் என்னும் இருவகை தினுசுகளும் பயிராகின்றன.

கம்பு, கேழ்வரகு, கேப்பை, சோளம்.—இப் புன்செய் பயிர்வகைகள் நீர்வளப்பமில்லாத மேட்டு நிலங்களிலேயே விளைகின்றன. முக்கியமாய் சோளம் சேலம் ஆத்தூர் திருச்செங்கோடு, நாமக்கல் தாலூகாக்களிலும்; கம்பு, கேழ்வரகு (கேப்பை) கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஊத்தங்கரை தாலூகாக்களிலும் விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றன.

கோள்ளு.—சாதாரணமாய் சேலம் ஜில்லா எங்குமே பயிரிடப்படுகின்றது.

துவரை.—தலக்காடு, பாராமஹால், பாலகாட் என்னும் பிரிவுகளில் எல்லாவற்றிலுமே துவரை

விளையுமென்றாலும் கிருஷ்ணகிரி தாலூகாவில் இது விசேஷமாய் பயிரிடப்படுகின்றது.

மோச்சை உளுந்து.—சேர்வராயன் மலையில் மொச்சையும், ஊத்தங்கரை ஓமலூர் தாலூகாக்களில் உளுந்தும் ஏராளமாய் விளைகின்றன.

புகையிலை.—ஆத்தூர் திருச்செங்கோடு என்னும் தாலூகாக்களில் புகையிலைத் தோட்டங்கள் மிகுதி.

எள்ளு.—இது தர்மபுரி தாலூகாவிலே விசேஷமாய் பயிரிடப்படுகிறது.

பருத்தி.—திருச்செங்கோடு, ராசிபுரம், நாமக்கல் தாலூகாக்களிலேதான் இது விசேஷமாய் விளைகிறது.

அவுரி.—நமது ஜில்லாவில் ஆத்தூர் தாலூகாவிலேதான் இதைக் காணலாம்.

நிலக்கடலை.—கொஞ்ச வருஷங்களாக ஐரோப்பியர்கள் தென்னிந்தியாவில் விளையும் இந்தக் கடலையை ஏராளமாய் வாங்கி, ப்ரான்ஸ் ஜெர்மெனி முதலிய இடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆகவே லாபத்தைக்கருதி நமது ஜில்லாவிலிருக்கும் விவசாயிகள் நிலக்கடலைப் பயிர்செய்கிறார்கள். இக்கடலையை விசேஷமாய் சேலம், ஆத்தூர், திருச்செங்கோடு தாலூகாக்களில் பயிரிடுகிறார்கள்.

கோதுமை.—இது சேர்வராயன் மலையில் விளைகிறது.

தென்னை.—இது ஆறுகளின் ஓரத்தில் ஜில்லா முழுவதுமே விளைகிறதென்றாலும் கிருஷ்ணகிரி, ஓமலூர் தாலூகாக்களில் மிகுதி.

பாக்கு, வெற்றிலை.—ஹோசூர் தாலூகாவில் வெற்றிலைத்தோட்டங்கள் வைத்துப் பயிரிடுகிறார்

கள். ஹோசூர், ஆத்தூர் தாலூகாக்களில் கமுகு செழிப்பாய் வளர்கிறது.

பழவகைகள்.—சேலம் ஜில்லா பழதினுசுகளுக்கு பேர்போனதென்று உங்களுக்குத் தெரியும். சேலம் ஒட்டுமாப்பழம் பிரசித்தி. இந்த ஜில்லாவில் எங்குமே மாந்தோப்புகள் உண்டு. ஹோசூர் ஓமலூர் தாலூகாக்களில் அநேக தினுசு வாழைப்பழங்கள் கிடைக்கும். ரஸ்தாளி, நவரம், மொந்தன், பச்சை நாடான் என்னும் தினுசுகள் மேற்கூறிய தாலூகாக்களில் கிடைக்கும். சேர்வராயன் மலைப்பிரதேசங்களில் பேரிக்காய், ஆப்பில், அத்தி, அன்னாசி முதலிய பழதினுசுகள் அகப்படும். சேர்வராயன் மலையில் காபி. ரப்பர் தோட்டங்கள் அநேகம் உள.

## VI. நீர்ப்பாய்ச்சல்

விவசாயம் செய்வதற்குத் தண்ணீர் முக்கியம். நீரில்லாமல்போனால் புல்பூண்டு முளையா. காலாகாலத்தில் வயல்களுக்குத் தண்ணீர் கட்டவேண்டும். இல்லாவிடில் முளைத்த பயிர்களெல்லாம் சாவியாய் விடும். நமது ஜில்லாவில் பலவிதமான நீர்ப்பாய்ச்சல்களிருக்கின்றன. நதிகளினின்று கால்வாய்கள் வெட்டித் தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். அநேக யிடங்களில் கிணறுகளைத்தோண்டி அதினின்றும் தண்ணீரை இறைத்து வயல்களுக்குக் கொண்டுபோகிறார்கள். இன்னும் சில யிடங்களில் கண்மாய்களையும் குளங்களையும் வெட்டி நீரைத் தேக்கிக் கொள்கிறார்கள். நாமக்கல் தாலூகா நீங்கலாக நமது ஜில்லாவில் 83,000 ஏக்ராக்கள் கிணற்று நீரினால் சாகுபடியாகிறது. ஏரிகளின் மூலமாய்

சுமார் 80,000 ஏக்ராக்களும், கவர்ன்மெண்டா ரால் உண்டுபண்ணிய வாய்க்கால் மூலமாய் சுமார் 20,000 ஏக்ராக்களும் சாகுபடியாகின்றன.

1877-ம் வருஷத்தில் நமது கவர்ன்மெண்டார் கிருஷ்ணகிரி தாலூகாவிலுள்ள பாரூர் என்னும் ஒரு பெரிய ஏரியை வெட்டினார்கள். பெண்ணை யார் என்னும் நதியை, நெடுங்கால் என்னுமிடத் தில் தடுத்து ஆற்றின் நீரை பாரூர் ஏரியில் தேக்கி மறுபடி அந்த நீரை அநேக சிற்றேரிகளுக்கும் வயல்களுக்கும் பாய்ச்சினார்கள். இந்த ஏரியின் விஸ்தீரணம் 688 ஏக்ராக்கள்.

நமது ஜில்லாவில் அநேக யிடங்களில் இயற் கையாகவே நீரூற்றுக்கள் ஊறி சிறு குட்டைக ளாகவும் குளங்களாகவும் மாறிவிட்டதனால் நீர் வசதி குன்றாமலிருக்கிறது.

## VII. காடுகளும் அவைகளின் விசேஷமும்

வெகுகாலத்திற்குமுன் நமது ஜில்லா காட டர்ந்த தேசமாயிருந்தது. காடுகளில் மிருகங் களும் விஷப்பாம்புகளும் இருந்தன. அக்காட்டு மிருகங்களை அடக்கி அஞ்சாமலிருந்த காட்டு மனிதர்களே அக்காடுகளில் வாசஞ்செய்திருக்க வேண்டும். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக் குப் போவது முன்காலத்தில் கஷ்டமாயிருந்தது. அப்படிப்போக நேரிட்டால் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகவே போவார்கள். வர்த்தகமும் நாக ரீகமும் அதிகரிக்க, காடுகளைவெட்டி வழிகளை ஆதிகாலத்து அரசர்கள் உண்டாக்கினார்கள். தற் காலத்தில் காடுகள் அதிகமாயில்லை. ஏனெனில் காடிருந்த இடங்கள் அநேகம் பெரிய பட்டணங் களாகவும் ஊர்களாகவும் ஆயின. காடுகள் முழு

வதையும் நாம் அழித்துவிடக்கூடாது. காடுகள் இருப்பதினுல் நமக்கு அநேக நன்மைகள் உண்டு. முதலாவது, அடர்ந்த காடுகள் இருந் தால் அவைகள் மேகங்களைக் காந்தம்போல் இழுத்து மழையை உண்டுபண்ணுகின்றன. மழை பெய்யாத ஊர்களில் மரஞ்செடி அடர்ந்துள்ள காடுகளைப் பாதுகாக்கவேண்டுமென்று சாஸ்தி ரங்களைக் கற்ருேர் சொல்லுகிருர்கள். இரண் டாவது, காடுகளிலேதான், தேன், மூங்கில், தேக்கு, பலா, வாழை, சீயக்காய் என்கிற சாமான்களும் இன்னும் அபூர்வ வஸ்துக்களும் விளைகின்றன. மூன்ருவது, நாம் காடுகளை வெட்டிவிட்டால் நமக்கு விறகு, கரி முதலியன கிடைப்பது கஷ்ட மாகும். நமது ஆடுமாடுகள் மேய்வதற்கும் வய லுக்கு உரம்போடுவதற்கும் வேண்டிய தழை களுக்குக் காடுகள் இருப்பது சவுகரியமாயிருக் கிறது. சில காட்டுமிருகங்களுடைய எலும்பும் தோலும் தற்கால வியாபார முறைமைக்கு இன்றி யமையாதனவாயிருக்கின்றன.

சேலம் ஜில்லாவில் கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான காடுகளின் விஸ்தீரணம் 1500 சதுர மைல். இக்காடுகளில் பெருந் தேக்குமரங்களும் மூங்கிலும் சந்தனமரங்களும் விளையும். தேக்கு சாதாரணமாக எல்லாக் காடுகளிலும் கிடைக்கும். சேலத்தை ஒட்டியுள்ள காடுகளில் மூங்கில்கள் ஏராளமாய் இருக்கின்றன. ஆனுல் மிகவும் நேர்த்தியான மூங்கில்கள் தர்மபுரி, ஹோசூர் தாலூகாக்களிலுள்ள காடுகளிலேதான் விளைகின் றன. கல்ராயன், பச்சைமலை, கொல்லிமலை, போதமலை முதலிய மலைகளிலும் மூங்கிற்காடுகளை வளர்க்கிருர்கள். இந்த மூங்கில்களை ஈரோடு,

திரிச்சிருப்பள்ளி, கரூர், சென்னைப்பட்டணம் என்னும் ஊர்களுக்கு மிகுதியாய் ஏற்றுமதி செய்கிறார்கள்.

சந்தனமரங்கள்.—சித்தேரி, சேர்வராயன், பச்சைமலை, கொல்லிமலை என்கிற இடங்களில் செழிப்பாய் வளருகிறதென்றாலும் டெங்கணிக்கோட்டைக் காடுகளில் விளையும் சந்தனமரங்களே மிகுந்த வாசனையுள்ளவைகளாயிருக்கின்றன. சேலம் ஜில்லாக் காடுகளிலிருந்து வயல் உரத்திற்காக தழைகளை வெட்டி திருச்சிருப்பள்ளி, தென் ஆற்காடு முதலிய ஜில்லாக்களுக்கு அனுப்புகிறார்கள்.

## VIII. தொழில்

சேலம் ஜில்லாவில் நூற்றுக்கு சுமார் 73 பேர் விவசாயம்செய்து ஜீவிக்கிறார்கள். இதரர்கள் பட்டணங்களிலும் கிராமங்களிலும் அநேகவித கைத்தொழில்களைச் செய்து ஜீவனம் செய்கிறார்கள். நமது ஜில்லாவில் விவசாயம் நீங்கலாக நெசவே முக்கியமான தொழிலாயிருக்கிறது. இந் நெசவுதொழிலை சாலியர்களும் தேவாங்கர்களும் பட்டுநூல்காரர்களும் கைக்கோளர்களுமே முக்கியமாகக் கைகொண்டிருக்கிறார்கள்.

துணி நெய்தல்.—நமது ஜில்லாவில் அநேகயிடங்களில் நெசவுதொழில் நடக்கிறது. முக்கியமாய் சேலம் டவுனிலும், இராசிபுரத்திலும், ஓமலூர், தாரமங்கலம், ஜலகண்டாபுரம், திருச்செங்கோடு, ஆத்தூர், நாமக்கல், தர்மபுரி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, ஹோசூர் என்னுமிடங்களிலும் சீமைநூலை வாங்கித் தறிகளில் அநேகவிதமான ஆடைகளை நெய்கிறார்கள்.

கம்பளிகளும், போர்வைகளும்.—இவைகளை சேலம்டவுனிலும் நாமக்கல் தாலூகாவில் கிழக்கு பாகத்திலும் சில குறும்பர்கள் செய்கிறார்கள்.

காங்குப்புடவைகள்.—இப்புடவை திருசை சேலம் டவுனைச்சேர்ந்த குகை யென்னுமிடத்தி லுள்ள தேவாங்கர்கள் செய்கிறார்கள். சாதாரண ஜனங்கள் இப்புடவைகளையே மிகுதியாய் வாங்கி தரித்துக்கொள்ளுகிறார்கள்.

தலை உருமால்.—பேட்டா என்று சொல்லும் ஒருவித தலையுருமாலை செவ்வாய்ப்பேட்டையில் நெய்கிறார்கள். இது வெகு நேர்த்தியாயிருக்கும்.

பட்டுவேஷ்டிகள்.—இவைகளை பட்டுநூல்கா ரர்கள் ஏராளமாய்ச் செய்கிறார்கள். இக்கைத் தொழில் சேலம் டவுனிலும் நாமக்கல்லிலும் நடந்துவருகிறது. மைசூரிலிருந்தும் இதர விடங் களிலிருந்தும் பட்டுநூல்களைத் தரவழைத்து சாய மேற்றிப் புடவைகளை நெய்கிறார்கள். சேலம் பட்டுக்கரை வேஷ்டிகளும் உருமால்களும் மிகப் பிரசித்தி.

தோல் பதனிடுதல்.—இது நமது ஜில்லாவில் முக்கியமான கைத்தொழில். இத்தொழிலை முகம் மதியர்களே நடத்திவருகிறார்கள். சேலத்துக் கருகிலுள்ள கிச்சிபாளையம் என்னுமிடத்தில் 14 பதனிடும் சாலைகள் இருக்கின்றன.

ஈயம் பித்தளைப்பாத்திரம்.—கொஞ்சகாலத்திற்கு முன் இடைப்பாடி, முத்துநாயக்கன்பேட்டை என்னும் ஊர்களில் பித்தளைப்பாத்திரம் செய்து வந்தார்கள். இப்பொழுது சேலத்திலுள்ள கன் னர்களே பித்தளைப்பாத்திரம் செய்துவருகிறார் கள். நாமக்கல் தாலூகாவில் சில யிடங்களில் நேர்த்தியான ஈயப்பாத்திரம் செய்கிறார்கள்.

வளையல்.—அரக்கு வளையல்களை சில பலிஜர்கள் நாமக்கல் தாலூகாவில் செய்கிருர்கள்.

கல்சட்டிகள்.—ஆத்தூர், ஓமலூர், நாமக்கல் தாலூகாக்களில் ஒருவிதமான மாக்கல் அகப்படுகிறது. அதைக்கொண்டு அநேகவித பாத்திரங்கள் செய்து அவைகளை திருச்சிணுப்பள்ளி தஞ்சாவூர் மதுரை ஜில்லாக்களுக்கு ஏற்றுமதி செய்கிருர்கள்.

## IX. போக்குவரவு சாதனங்கள்

ஒரு நாடு செழிப்படைந்து உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமாளுல் அந்நாட்டில் போக்குவரவு சாதனங்கள் மிகுதியாய் இருக்கவேண்டும். நாட்டில் விளையும் பொருள்களை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்ய நல்ல ரஸ்தாக்கள் வேண்டும். அதேமாதிரியாக வெளியூர் சரக்குகள் நம்மூருக்கு எளிதாக வரக்கூடியதாகயிருக்கவேண்டும். ஜில்லாவின் முக்கிய பட்டணத்திலிருந்து பண்டங்கள் மிகுதியாய் விளையும் கிராமங்களுக்கு இலகுவாய் வண்டிகள்போக ரஸ்தாக்கள் அவசியம் வேண்டும். ரஸ்தாக்கள் மிகுதியாய் ஏற்பட்டால் வியாபாரம் பெருகும். வியாபாரம் பெருகிளுல் செல்வம் விருத்தியாகிறதற்குச் சந்தேகமில்லை.

ஆதிகாலம் முதற்கொண்டே நமது ஜில்லாவில் அநேக ரஸ்தாக்கள் போடப்பட்டிருந்தன. மைசூரைக் கைக்கொண்ட டிப்புசுல்தான் காலத்தில் ஹோசூர், தர்மபுரி தாலூகாக்களில் வசதியான பாட்டைகளிருந்தன. ஆளுலும் நமது ஜில்லாவில் இங்கிலீஷ்காரர் வந்தபிறகே ஏராளமான ரஸ்தாக்கள் ஏற்பட்டன. 1829-ம் வருஷத்தில் நமது ஜில்லாவிற்கு கலெக்டராயிருந்த

(Mr. Orr) ஆர் துறையே ஜல்லிபோட்ட அநேக ரஸ்தாக்களை யுண்டாக்கினர். தற்காலத்தில் நாமக்கல் தாலூகா நீங்கலாக நமது ஜில்லாவில் 1800 மைல் நீளமுள்ள ரஸ்தாக்களிருக்கின்றன.

நமது ஜில்லாவிலுள்ள முக்கியமான சாலைகள் பின்வருமாறு: (1) சேலத்திலிருந்து வடக்கே ஓமலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஹோசூர் தாலூகாக்களுக்குச் செல்லும் ஓர்பாதை. (2) இதேபாதையில் அதமன் கோட்டையிலிருந்து பிரிந்து தர்மபுரி வழியாய் கிருஷ்ணகிரிக்குச் சென்று அங்கிருந்து கிழக்குநோக்கி வடஆற்காட்டுக்குச் செல்லும் பாதை. (3) சேலத்திலிருந்து கிழக்கில் ஆத்தூர் தாலூகாவில் சென்று திருச்சினுப்பள்ளிக்குச் செல்லும் பாதை. இதேரஸ்தாவில் ஆத்தூரினின்றும் பிரிந்து கிழக்கு நோக்கி தென்ஆற்காட்டுக்குச் செல்லும் பாதை. (4) சேலத்திலிருந்து தெற்குநோக்கி இராசிபுரம், நாமக்கல் தாலூகாக்களின் வழியாய் திருச்சினுப்பள்ளி செல்லும் பாதை. (5) சேலத்தினின்று தென்மேற்காய்ச் சென்று திருச்செங்கோடு தாலூகா வழியாக பவானி, கோயம்புத்தூருக்குச் செல்லும் பாதை.

இருப்புப்பாதைகள்.–நமது ஜில்லாவில் தென்னிந்தியா இருப்புப்பாதையும் அதன் கிளைகளும் ஓடுகின்றன.

(1) திருப்பத்தூர் ஈரோடு இருப்புப்பாதை.—இது நமது ஜில்லாவில் ஊத்தங்கரைத் தாலூகாவில் நுழைந்து ஊத்தங்கரை, ஓமலூர், சேலம், திருச்செங்கோடு என்னும் தாலூகாவின் வழியாய் ஈரோடு செல்லுகிறது. இப்பாதையிலுள்ள முக்கியமான ஸ்டேஷன்களாவன: மொரப்பூர் ஜங்ஷன், பொம்மிடி, சேலம், சங்கரிதுர்க்கம், காவேரி.

(2) மோரப்பூர் ஜங்ஷனிலிருந்து தர்மபுரிக்கு ஒரு கிளையும் தர்மபுரியிலிருந்து ஹோசூருக்கு மற்றொரு கிளையும், போகின்றன. இக்கிளைகளிலுள்ள முக்கியமான ஸ்டேஷன்களாவன: தர்மபுரி, பால்க்கோடு, மாரண்டஹல்லி, ராயக்கோட்டை, கேலமங்கலம், ஹோசூர்.

(3) கிருஷ்ணகிரியிலிருந்து வட ஆற்காட்டைச் சேர்ந்த திருப்பத்தூருக்குச் செல்லும் ஒரு சிறு இருப்புப்பாதை.

ஏற்றுமதி.—மேற்கூறிய இருப்புப்பாதைகளின் வழியாயும், இதர ரஸ்தாக்களின் மூலமாயும் நமது ஜில்லாவில் விளையக்கூடிய சரக்குகள் வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவைகளில் முக்கியமானவை, சேலம் வேஷ்டிகளும், பதனிட்ட தோல்களும், பாய்களும், பயிர் பச்சைகளுமே. கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், சங்கரிதுர்க்கம் என்னுமிடங்களிலிருந்து அரிசியும், தானியமும்; பாக்கு, நிலக்கடலை, மிளகாய், வெங்காயம் சேலத்தினின்றும்; சேலம், தாஸம்பட்டி, மொரப்பூர் என்னுமிடங்களிலிருந்து புகையிலையும்; சேலம், திருச்செங்கோடு என்னுமிடங்களிலிருந்து நெய்யும்; கிருஷ்ணகிரி, தர்மபுரியென்னுமிடங்களிலிருந்து எள்ளும் ஆமணக்கும், கிருஷ்ணகிரி, சேலம், சங்கரிதுர்க்கம் என்னும் ஊர்களிலிருந்து புண்ணாக்கும் வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இறக்குமதி.—நாம் அன்னிய தேசத்திலிருந்து வரவழைக்கும் சாமான்களுக்குக் கணக்கே இல்லை. நாம் உபயோகிக்கும் சாமான்களில் அநேகம் இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா என்னும் தேசங்களிலிருந்தே வருகின்றன.

அவைகளை நாமே செய்துகொள்ளத்தக்க ஸ்திதியில் நாமிருக்கவில்லை. முக்கியமாய்ச் சீமையிலிருந்து இரும்புச் சாமான்களும், மல்துணிகளும் பட்டணத்திலிருந்து மண்ணெண்ணையும் நமது ஜில்லாவிற்கு வந்து சேருகின்றன.

## X. முக்கிய இடங்களும் அவைகளின் விசேஷமும்

இந்த அத்தியாயத்தில் நமது ஜில்லாவிலுள்ள சில முக்கியமான இடங்களைப்பற்றிப் படிப்போம்.

### (1) சேலம் தாலூகா

இத்தாலூகா மலைகளும், பள்ளத்தாக்குகளும், பயிர்பச்சை செழிப்பாய் வளர்ந்துள்ள இடங்களும் நிரம்பியுள்ளது. சில இடங்களில் வெய்யலின் கடுமை பொறுக்கமுடியாது. சிற்சில இடங்களில் ரமணீகரமான சீதோஷ்ணஸ்திதியும் உண்டு. திருமணிமுத்தாறு என்னும் நதி இத்தாலூகாவில் பாய்ந்து அநேக இடங்களைச் செழிப்புறச் செய்கிறது. சேலம் தாலூகாவில் அநேக ஏரிகள் உண்டு. தென்னிந்தியா இருப்புப்பாதையும் இத்தாலூகா வழியாய்ச் செல்கின்றது.

சேலம்.—இதுதான் நமது ஜில்லாவிற்கு முக்கிய பட்டணம். ஒரு ஜில்லாவிற்குரிய அநேக கச்சேரிகள் இங்கே இருக்கின்றன. சேலம் டவுன், பங்களூர், திருச்சிநுப்பள்ளி, கடலூர் என்னும் ஊர்களிலிருந்து வரும் ராஜபாட்டைகளின் சங்கத்தில் இருக்கிறது.

சேலம் டவுனைச்சுற்றி நாலாபக்கமும் அநேக குன்றுகள் இருக்கின்றன. இவைகளில் சேலத்திற்கு ஐந்து மைலில் வடக்கேயிருக்கும் சேர்வராயன் மலை முக்கியமானது.

திருமணிமுத்தாறு சேலம் நகரை இரண்டு பாகமாய்ப் பிரிக்கின்றது. ஆற்றின் இடதுகரையில் சேலம் கோட்டை இருக்கிறது. இந்த ஆற்றைக் கடந்துசெல்லும்பொருட்டு ஒரு பாலம் உண்டு. இப்பாலத்தினின்றே அநேக ராஜபாட்டைகள் வெவ்வேறு ஊர்களுக்குச் செல்லுகின்றன.

கோட்டை.—இது நமது பட்டணத்தில் மிகவும் பழமையான இடம். கோட்டைக்குள்ளிருக்கும் கட்டிடங்களில் கோரியும், சௌந்தரராஜப் பெருமாள்கோயிலும் விசேஷமாய் கவனிக்கத் தக்கவை.

கோட்டைக்கு மேற்கே லண்டன் மிஷனைச் சேர்ந்த பாதிரிகள் தங்கியிருக்கிறார்கள். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஹைஸ்கூலும் இங்கே உண்டு.

சேவ்வாய்பேட்டை, குகை என்பவை சேலத்தின் மற்றபாகங்கள். செவ்வாய்பேட்டையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை ஒரு பெரிய சந்தை கூடும்; ஆகையால் இதற்கு இந்தப்பேர் வந்தது. ஆங்கிலர்கள் இதையே 'ஷேவ்பெட்' என்பார்கள். இதற்குத் தெற்கே 'குகை' இருக்கிறது. இங்கு அநேக தேவாங்கர்கள் இருக்கிறார்கள்.

கோயில்கள்.—சேலம் டவுனில் மேட்டுத் தெருவில் ஒரு சிவாலயம் இருக்கிறது. இங்கிருக்கும் சிவனுக்கு சுகவா ணீஸ்வரர் என்று பெயர். கோட்டைக்குள்ளிருக்கும் சௌந்தரராஜப் பெருமாள்கோயிலும், டவுன் கடைத்தெருவிலிருக்கும் வரதராஜப்பெருமாள் கோயிலும் வைஷ்ணவர்களுக்குரியவை. சேலம் ஒரு முனிசிபாலடி.

முனிசிபல் சங்கத்தார் ஜனங்களுக்கு சுத்தமான நீரை குழாய்வழியாய் பனைப்பட்டி என்னுமிடத்திலிருந்து கொண்டுவருகிறார்கள். இவர்களே இரண்டாவது கிரேட் காலேஜு ஒன்றையும் நடத்திவருகிறார்கள்.

சேர்வராயன் மலை.—சேலத்திற்கு வடக்கே 12 மைலில் இந்த மலை இருக்கின்றது. இது மிகவும் குளிர்ச்சியான இடம். ஆகையால் காபித்தோட்டங்களை இங்கே வளர்த்துவருகிறார்கள். இந்த மலைத்தொடரைச் சேர்ந்த ஏர்க்காடு மிகவும் உன்னதமானது. ஏர்க்காட்டில் அநேக ஐரோப்பிய கனவான்கள் வசிக்கிறார்கள். காதொலிக் மிஷனைச் சேர்ந்த கன்னியாமட ஸ்திரீகளுக்கு இந்த ஊரே கோடைகால ஆஸ்ரிமமாயிருக்கிறது.


மல்லூர்.—இது சேலத்திற்குத் தெற்கே எட்டாவது மைலில் இருக்கிறது. இதற்கு மேற்கில் போய்மான் காடு என்னும் குன்று இருக்கிறது. சூரியகிரணங்கள் இதன்மேல் விழும்போது மான் போல் ஒரு நிழல் தட்டுப்படுகிறது.

அயோத்தியா பட்டணம்.—இது சேலத்திற்குக் கிழக்கே 5 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு கோதண்டராமஸ்வாமிகோயில் ஒன்று உண்டு. இதில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் சிலையைக் காணலாம்.

ஆத்தையம்பட்டி.—இது சேலத்தினின்று திருச்செங்கோடுக்குப் போகும் ரஸ்தாவிலிருக்கிறது. இங்கு வாரம் ஒரு சந்தை கூடும்.

## (2) இராசிபுரம் தாலூகா

இராசிபுரம்.—இதுவே இத்தாலூகாவிற்கு முக்கிய பட்டணம். இங்கே ஒரு தாசில்தார் இருக்



ஏர்க்காடு.

கிறார். ஒரு விஷ்ணுகோயிலும் சிவன்கோயிலும் இருக்கின்றன. விஷ்ணுவின் பெயர் வரதராஜன். சிவன் பெயர் கைலாச நாதன்.

நாமகிரிப்பேட்டை.—இது இராசிபுரத்திற்கு 6 மைல் கிழக்கே இருக்கிறது. முன் ஒருகால் இங்கே இரும்பு கனிகளினின்று எடுக்கப்பட்டது. இப்பொழுதும்கூட கட்டிப் பறையர்கள் இரும்பை கனிகளினின்றும் எடுத்து உருக்கி அதை தெலுங்குக் கொல்லன்களுக்கு விற்பனை செய்கிறார்கள்.

## (3) நாமக்கல் தாலூகா

இத்தாலூகா மாட்டுச் சந்தைக்கும் துணி தினுசுகள் நெய்தற்கும் பேர்போனது.

நாமக்கல்.—இது தாலூகாவிற்கு முக்கிய ஸ்தலம். இங்கே டிவிஷனல் ஆபிஸரும், தாசில்தார், டிப்டி தாசில்தார், டிஸ்டிரிக்ட் முன்சீப், சப்-ரிஜிஸ்ட்ரார் என்னும் உத்யோகஸ்தர்களும் இருக்கிறார்கள். ஒரு போர்டு ஹைஸ்கூலும், ஆஸ்பத்திரியும், பெண்களுக்காக ஓர் கல்விச்சாலையும் உள. இது ஒரு யூனியன்.

நாமக்கல் ஒரு பேர்போன விஷ்ணு ஸ்தலம். இங்கே அநேக தீர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று கமலாலயம். இது லக்ஷ்மி அவதாரமாகிய நாமகிரி அம்மாளுக்குரியதாம்.

மோகனூர்.—இது நாமக்கல்லுக்குத் தெற்கே 12-வது மைலிலிருக்கிறது. இது ஒரு யூனியன் கிராமம். இங்கு ஒரு சிவன்கோயில் உண்டு. கோயிலிலிருக்கும் சிவனுக்கு அசல தீபீஸ்வரர் என்று பெயர். இச்சிவபிரானுக்கு முன்பு எறிய விட்ட விளக்கு அணைகிறதில்லையாம்! இவ்வூ

ரில் கல்சித்திரவேலை செய்யும் சில தச்சர்கள் இருக்கிறார்கள். இங்கிருந்து வாழைப்பழம் ஏராளமாய் ஏற்றுமதியாகிறது.

நைனமலை (நாயனார்மலை).—இது நாமக்கல்லுக்கு வடகிழக்கே 10 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு குன்றின்மேலிருக்கும் விஷ்ணுகோயில் பிரசித்தம்.

சேந்தமங்கலம்.—இது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். ஒரு ஸப்-ரிஜிஸ்ட்ராரும், ஸப்-மாஜிஸ்ட்ரேடும் இங்கு தங்குகிறார்கள்.

பரமத்தி.—இது நாமக்கல்லுக்குத் தென்மேற்கே இருக்கிறது. இங்கே டிப்டி-தாசில்தாரும், ஸப்-ரிஜிஸ்ட்ராரும் இருக்கிறார்கள். இங்கிருக்கும் சிவன்கோயில் மதில்களில் அநேக சாஸனங்கள் கல்வெட்டால் எழுதப்பட்டிருக்கின்றன. இங்கே நேர்த்தியான பட்டுக்கரை வேஷ்டிகளை சௌராஷ்டிரர்கள் நெய்கிறார்கள்.

## (4) ஆத்தூர் தாலூகா

ஆத்தூர்.—இது தாலூகாவின் முக்கிய பட்டணம். இவ்வூருக்கு நடுவில் வசிஷ்டநதி ஓடுகிறது. ஆற்றுக்கு வடக்கே கட்டி முதலியார்களால் கட்டப்பட்ட ஒரு கோட்டை பார்க்கத்தக்கது. ஆத்தூரில் தாசில்தாரும், ஸப்-ரிஜிஸ்ட்ராரும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த உத்யோகஸ்தரும் இருக்கிறார்கள்.

எத்தாம்பூர்.—இது வசிஷ்ட நதியின் வடகரையிலிருக்கிறது. இது ஒரு யூனியன் கிராமம். இங்கு வியாபாரம் மிகுதி.

கங்கவல்லி.—இது சுவேத நதிக்கரையில் வடபுறத்தில் இருக்கிறது. இங்கு நெல் வியாபாரம் மிகுதி.

தலைவாசல்.—வசிஷ்ட நதியின் வடகரையிலுள்ள இந்த ஊர் சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கு இடையில் இருந்தபடியால் இதற்கு இப்பெயர் வாய்ந்தது. இவ்வூரில் கிருஷ்ணம நாயக்கரால் கி. பி. 1865-ல் கட்டப்பட்ட ஒரு பெரிய சத்திரம் உண்டு.

தம்மம்பட்டி, சேந்தாராப்பட்டி என்னும் ஊர்கள் இத்தாலூகாவை சேர்ந்தவை. இவைகளில் வியாபாரம் அதிகம்.

## (5) திருச்சேங்கோடு

திருச்சேங்கோடு.—இது தாலூகா முக்கிய பட்டணம். தாசில்தார் இருப்பிடமும் இதுவே. இவ்வூரில் இருக்கும் அர்த்தநாரீஸ்வரன் கோயில் மிகப்பிரசித்தம். இக்கோயில் திருச்செங்கோடு மலைமேல் இருக்கிறது. இவ்வூரில் அநேக கல்வெட்டு சாஸனங்கள் இருக்கின்றன.

சங்கரிதுர்க்கம்.—இது திருச்செங்கோட்டிற்கு வடக்கே 7 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கே தான் டிவிஷனல் ஆபீஸர் இருக்கிறார். இவ்வூர்க் கிணற்று நீர் மிகவும் நல்லது. பால்பாபி என்னும் கிணற்று நீரை உங்களில் சிலர் குடித்திருக்கலாம். இவ்வூரிலிருக்கும் மலைக்கு சங்ககிரி என்று பெயர். மலையுச்சியில் இருக்கும் சென்னக் கேசவபெருமாள் கோயிலுக்கு நீங்கள் போயிருக்கிறீர்களா?

எடப்பாடி.—இது சரபங்கநதியின் வலதுகரையின்மேலிருக்கிறது. இது ஒரு யூனியன். பெரிய வியாபாரஸ்தலம். இங்கு செய்யும் பித்தளைப் பாத்திரங்கள் நன்றாய் இருக்கும்.

குமாரபாளையம்.—இது பவானிக்குச் சமீபத்தில் இருக்கும் ஒரு புண்ணியஸ்தலம்.

## (6) ஓமலூர் தாலூகா

ஓமலூர்.—இங்கு தாலூகா தாசில்தார் இருக்கிறார்.

தாராமங்கலம்.—இது ஒரு யூனியன் கிராமம். ஓமலூரிலிருந்து 6 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு அழகான ஒரு சிவன்கோயில் உண்டு.

அமரகுந்தி.—இது தாராமங்கலத்திலிருந்து 21 மைல் தூரத்திலிருக்கிறது. முன் ஒருகாலத்தில் இப்பிரதேசங்களில் அரசுசெலுத்திய கட்டிமுதலியார்களுக்கு இதுவே முக்கிய ஸ்தலமாயிருந்தது. இங்கு அநேக கோயில்கள் இருக்கின்றன.

ஜலகண்டாபுரம, மேச்சேரி, நங்கவல்லி என்னும் கிராமங்கள் இத்தாலூகாவைச் சேர்ந்தவை. மேச்சேரியில் பத்திரகாளியை விசேஷமாய்க் கொண்டிருக்கிறார்கள்.

## (7) ஊத்தங்கரைத் தாலூகா


இது பாராமஹாலைச் சேர்ந்தது. இத்தாலூகாவில் மலேரியா என்னும் விஷசுரம் எங்கும் பரவிவிட்டது.

ஹரூர்.—இது வாணியாற்றின் கரையிலிருக்கிறது. தாலூகா கச்சேரிகள் இங்கேயே இருக்கின்றன.

பொம்மிடி.—இங்கு ஒரு சந்தை வியாழக்கிழமை தோறும் கூடும். இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன்.

தீர்த்தமலை.—இது இப்பேருடைய மலையடிவாரத்திலிருக்கிறது. இங்கு அநேக நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன.

கம்பயநல்லூர், சிங்காரப்பேட்டை, மொரப்பூர், ஊத்தங்கரை என்னும் கிராமங்கள் இத்தாலூகாவில் இதர ஊர்கள்.



ஹோகனகல் நீர்வீழ்ச்சி.

## (8) தர்மபுரி தாலூகா

இது மலையடர்ந்த தாலூகா. தர்மபுரி.—இது தாலூகாவுக்கு முக்கிய பட்டணம். இங்கே டிவிஷனல் ஆபீசரின் கச்சேரிகளும் இருக்கின்றன. இவ்வூரில் நல்லெண்ணெ, தோல், தானியம் முதலிய பொருள்கள் மிகுதியாய் வியாபாரம் ஆகின்றன.

ஹோகனகல்.—இது தர்மபுரிக்கு மேற்கே 26 மைலில் இருக்கும் நீர்வீழ்ச்சி. இங்கு காவேரி ஒரு ஆழமான பள்ளத்தில் விழுவதைப் பார்க்க விநோதமாயிருக்கும். இது புண்ணிய தீர்த்தங்களில் மிகச்சிறந்தது.

அதமன்கோட்டை.—இது ஒரு பழமையான ஊர். ஆதிகாலத்து அதிகமான்களிருந்த இடம் போலும். தர்மபுரியிலிருந்து $4\frac{1}{2}$ மைலில் இருக்கிறது.

பாலக்கோடு.—இது தர்மபுரிக்கு வடக்கே 14 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கே புளி மிகுதியாய் விளைகிறது. இவ்வூர் பறையர்கள் தேங்காய், பனை, ரயில்கத்தாழை முதலியவைகளினின்று கயிறு பின்னுகிறார்கள்.

பெண்ணகரம், தோப்பூர், காரிமங்கலம், பாப்பாரபட்டி, பெரும்பாலை என்பன இத்தாலூகாவைச் சேர்ந்த மற்ற கிராமங்கள்.

## (9) ஹோசூர் தாலூகா

ஹோசூர்.—இது தாலூகாவிற்கு முக்கிய பட்டணம். இந்த டிவிஷனைச்சேர்ந்த சப்-கலெக்டர் இங்கேயிருக்கிறார்.

அங்குசகிரி.—இது ஒரு பாளையத்தைச்சேர்ந்த ஊர். இங்கு ஒரு கோட்டையிருக்கிறது.

பேரிக்கை.—இங்கே பட்டுப்பூச்சிகளை வளர்த்து அவைகளினின்று பட்டை யெடுத்து நூலாக்கு கிறார்கள்.

டங்கணிக்கோட்டை.—பல ஊர்களுக்குச் செல் லும் ரஸ்தாக்கள். இங்கு ஒருங்கு சேருகின்றன.

கேளமங்கலம்.—இது டங்கணிக்கோட்டைக் குச் சற்று வடகிழக்கே யிருக்கிறது. இங்கிருக்கும் பேதாளம்மன்கோவில் பிரசித்தம். இங்கு ஒரு சந்தையுண்டு.

ராயக்கோட்டை.-இதுகிருஷ்ணகிரிக்குமேற்கே 17 மைல் தூரத்திலிருக்கிறது. ஆதிகாலத்தில் பாணர்களும், சோழர்களும், ஹோயசல்யர்களும் இங்கு இயற்கையாய் அமைந்துள்ள கோட்டை யைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆங்கிலக் கம்பெனியார்களும் இக்கோட்டைமீது கண்ணு யிருந்தார்கள்.

சூலகிரி, ரத்னகிரி, நீலகிரிதுர்க்கம், அஞ் செட்டிதுர்க்கம், தளி என்னும் ஊர்களும் இத் தாலூகாவில் அடங்கியிருக்கின்றன. தக்ஷிண பூமியினின்றும் தமிழ் தேசங்களுக்கு இத்தாலூகா வழியாகவே சேனைகள் வரவேண்டியிருந்தன. ஆகவே இத்தாலூகாவில் எங்கு பார்த்தாலும் கோட்டைகள் ஏற்பட்டு கம்பெனியார் காலத்தி லும் ஹைதர் காலத்திலும் நமது ஜில்லாவைச் சேர்ந்த ஊர்களைக் கூடுமானமட்டும் நாட்டை அரசாளுவோர் காப்பாற்றி வந்தார்கள்.

## (10) கிருஷ்ணகிரி தாலூகா

இந்தத் தாலூகா நமது ஜில்லாவிற்கு வடகிழக் குக் கோடியிலிருக்கிறது. மைசூருக்கும் கர்னாடக தேசங்களுக்கும் மத்தியில் இருப்பதால் அநேக

பெரிய சாலைகள் இத்தாலூகா வழியாய்ச் செல்லு கின்றன.

கிருஷ்ணகிரி.—இது தாலூகாவிற்கு முக்கிய பட்டணம். இங்குள்ள கல்கோட்டை சரித்திரத்தில் பிரசித்தமானது. ஒரு தாசில்தாரும் இதர தாலூகா உத்யோகஸ்தர்களும் இங்கிருக்கிறார்கள்.

மகாராஜாகடை.—இது கிருஷ்ணகிரிக்கு சற்று வடகிழக்கே 7-வது மைலில் இருக்கிறது. இந்த ஊர் இப்பெயரையுடைய மலை அடிவாரத்தின் கீழ் அமைந்துள்ளது. சிவாஜீ என்னும் பேர் பெற்ற மகாராஷ்டிர அரசர் இம்மலையிலுள்ள கோட்டைகளைக் கட்டினாராம்.

காவேரிபட்டணம்.—இது கிருஷ்ணகிரிக்குத் தெற்கே $7\frac{1}{2}$ மைல் தூரத்தில் பெண்ணையாற்றின் கரையில் இருக்கிறது. இது சரித்திரத்தில் பேர் பெற்றது. வெற்றிலைத்தோட்டங்களும் மாந்தோப்புகளும் இங்கு மிகுதியாயிருக்கின்றன. இவ்வூரில் ஆட்டும் நல்லெண்ணையை வெளியூருக்கு அனுப்புகிறார்கள்.

## XI. ஜில்லா சரித்திரம்

ஆதிகாலம்.—பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் நமது ஜில்லா காடடர்ந்த நிலமாயிருந்தது. மலைகளிலும் குகைகளிலும் நாகரீகமற்ற காட்டு மனிதர்களே வசித்தார்கள். முதலில் இவர்கள் முரட்டுக்கல்லால் செய்த கருவிகளைக்கொண்டு வேட்டையாடி மாமிசத்தை யுண்டு ஜீவித்துவந்தார்கள். பின்பு வழவழப்பாய்த் தேய்த்த கல் கருவிகளைச் செய்துகொண்டார்கள். அதற்குப்பின் இரும்பு இருக்கும் கனிகளைக் கண்டுபிடித்து இந்த உலோ

கத்திஞல் தேவையான ஆயுதங்களைச் செய்து கொண்டார்கள். இக்கருவிகள் பூமியில் நமது ஜில்லாவில் அநேக இடங்களில் புதைந்து கிடைப்பதை நாம் பார்க்கலாம். இக்காலத்தில் இறந்துபோனவர்களை மண்ணுல் செய்த தாழி களில் இட்டுப் புதைத்துவந்தார்கள். இவர்களை கற்கால மனிதர் என்று சொல்லுகிருேம்.

சரித்திர ஆரம்பம்.—சரித்திரம் ஆரம்பிக்கும் பொழுது நமது ஜில்லாவில் ஊர்களும் பட்ட ணங்களும் கிடையா. ஜில்லா முழுவதுமே காடு களும் மலைகளும் அடர்ந்த பூமியாயிருந்தது. இதற்குத் தெற்கிலும் மேற்கிலும் புகழ்பெற்ற தமிழ்தேசங்கள் இருந்தன. இவைகளே சேர, சோழ, பாண்டிய நாடுகள். மேற்கூறிய காட்டுப் பிரதேசத்திற்கு வடக்கே அசோக மகாராஜாவால் ஆளப்பட்ட மௌரிய ராஜ்யம் இருந்தது. ராஜ ரிஷியாகிய அசோக மகாராஜாவால் ஆளப் பட்ட இந்த ராஜ்யம் மைசூர் மாகாணத்தைச் சேர்ந்த சித்தப்பூர் என்னும் ஊர்வரையில் எட்டி யிருந்தது. ஆகவே மௌரிய ராஜ்யத்திற்கும், மிக்க நாகரீகமடைந்த தமிழ் நாடுகளுக்கும் இடையே உள்ள காட்டுப்பாகத்தில் ஒரு பகுதி யே நமது ஜில்லா.

பாண்டியர்களும் ரோமர்களும்.—மௌரிய சக்ர வர்த்தியாகிய அசோகர் கி. மு. 231-ல் இறந்தார். இவர் இறந்தவுடனே மௌரிய ராஜ்யம் க்ஷீண திசையடைந்தது. சேரர்களாவது சோழர்களா வது மௌரிய தேசத்தைச்சேர்ந்த மைசூர் ராஜ் யத்தின்மீது படையெடுக்கவில்லை. ஏனென்ருல் தமிழ் அரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகவே காடாக

யிருந்த நமது ஜில்லாவை ஒரு அரசராவது கைக் கொள்ள முன்வரவில்லை.

கி.பி. முதலாவது நூற்றுண்டு ஆரம்பத்தில் ரோமர்கள் எஜிப்த் என்னும் தேசத்தைக் கைப் பற்றிக்கொண்டு அங்கிருந்து இந்தியாவின் மேற்குக் கடலோரமாகிய மலையாள தேசத்திற்கு அநேக வர்த்தகர்களை அனுப்பினுர்கள். தென் இந்தியாவில் விளைந்த முத்துக்களையும் மிளகு கெம்பு முதலிய வஸ்துக்களையும் ரோமர்கள் அதிக விலைகொடுத்து வாங்கிவந்தார்கள். மிளகும், முத்தும் பாண்டிய தேசத்தில் ஏராளமாய்க் கிடைத்தன. கெம்பு என்னும் விலையுயர்ந்த மணியானது கோயம்புத்தூர், படியூர் என்னும் ஊர்களிலேயே விளைந்தது. ஆகவே மதுரை, கோயம்புத்தூர், மலையாளம் என்னும் ஊர்களிலிருந்து ஏராளமான சரக்குகள், ரோம், பாபிலோனியா எஜிப்து முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இச்சரக்குகளை ரோமர்கள் தங்கள் தேயத்துத் தங்கநாணயங்களைக் கொடுத்து வாங்கிவந்தார்கள். இத்தகைய ரோம தங்க நாணயங்கள் மதுரையிலும், கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பொல்லாச்சி, சாவடிபாளையம், வெள்ளாலூர் என்னும் இடங்களிலும், பங்களூரிலும் ஏராளமாய் இப்பொழுதைக்கும் அகப்படுகின்றன.

ஆனல் மேற்கூறிய பண்டங்களை வியாபாரிகள் எந்த வழியாய்க் கொண்டுசென்றனர்? மதுரையிலிருந்து கோயம்புத்தூருக்கும், இவ்விடமிருந்து பங்களூருக்கும் சென்ற வழிகள் நமது ஜில்லாவைச் சுற்றியே சென்றிருக்கவேண்டும். கி. பி. முதலாவது நூற்றுண்டில் நமது ஜில்லா

வில் வியாபாரத்தில் பேர்பெற்ற ஊர்களாவது, நல்ல ரஸ்தாக்களாவது இருந்தனவாகத் தெரிய வில்லே. ஆனால் நாகரீகமடைந்த அநேக தேசத் தார்கள் இந்த ஜில்லாவின் வழியாய்ச் சென்றிருக் கலாம். இதுவே காட்டு நிலமாயிருந்த இந்த ஜில் லாவும் நாகரீகத்தை நாளடைவில் அடைவதற் குத் தகுந்த ஹேதுவாயிருந்தது.

சங்ககாலம்.—இது நிற்க, மதுரையில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததாக உங்களில் அநேகர் கேட்டிருப் பீர்கள். முதல், இடை, கடை என்று சொல் லும் மூன்று கல்விச்சங்கங்கள் பாண்டியநகரில் இருந்தன. கடைச்சங்கமானது கி. பி. இரண்டா வது நூற்றாண்டில் இருந்ததாக கல்வியிற்சிறந்த பெரியோர்கள் கூறியுள்ளார். இச்சங்கத்தில் அரிய பெரிய கவிஞர்களும் சாஸ்திரத்தை நன்கு கற்றுணர்ந்த பெரியோர்களும் அங்கத்தினரா யிருந்தார்கள். இவர்களுக்குப் பொருளுதவி கொடுத்துக் கல்வியை அபிவிருத்தி செய்தவர் கள் பாண்டிய அரசர்களே. இச்சங்கத்தைச் சேர்ந்தவர்களில் பரணர், கபிலர், வள்ளுவர், ஔவையார் முக்கியமானவர்கள். திருக்குறளே இயற்றி அருளியவர் வள்ளுவர். ஔவையார் வாக்கியங்களேக் கேட்டு மகிழாதவர் தமிழுலகில் யாவருமில்லே. இந்த மாதுசிரோமணி நமது ஜில்லாவைச் சேர்ந்த தர்மபுரியிலேயே வளர்ந்து அவ்வூரை அப்பொழுது ஆண்டுகொண்டிருந்த அதியமான் நெடுமான் அஞ்சி யென்னும் வள்ள லின் நன்றியைப் பூராவாக அடைந்தவள். இந் தத் தர்மபுரியையே சங்ககாலத்தில் தகதூர் என்று சொல்லிவந்தார்கள்.

ஆகவே கி. பி. இரண்டு அல்லது மூன்ருவது நூற்ருண்டில் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த தர்மபுரியும் அதைச் சுற்றிலுமுள்ள இடமும் அதியமான் என்று பெயர்தரித்த சில சிற்றரசர்களால் ஆளப்பட்டன. இச்சிற்றரசர்கள் வஞ்சி அல்லது கரூர் என்னுமிடத்தைத் தலைநகரமாய் வைத்துக்கொண்டு ஆண்டுவந்த சேரர்களுக்குக் கப்பம் கட்டிவந்தார்கள். அதியமான் என்னும் பட்டம் தரித்த அரசர்கள் தமிழ் மக்களாகிய மலவர் என்னும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்றும் இவர்களில் ஒருவரே தென்இந்தியாவில் முதல்முதலில் கரும்பை நட்டுப் பயிர்செய்தவர்களென்றும் அகநானூறு புறநானூறு என்னும் நூல்களினுல் தெரிகிறது. முற்கூறிய நெடுமான் அஞ்சியின் மகனே சங்கநூற்களிற் கூறியுள்ள எழுனி. இவருக்கும் சேர ராஜாவாகிய பெருஞ் சேரல் இரும்பொறைக்கும் பெரிய யுத்தம்நேரிட்டு வஞ்சிமன்னன் தகதூராகிய தர்மபுரியை முற்றுகைபோட்டு எழுனியைத் தோற்கடித்தான். இவ்விஷயத்தைச் சங்கவித்வான்களாகிய அரிசில் கிழாரும் பொன்முடியாரும் தகதூர் யாத்திரை என்னும் சிறு நூலில் பாடியுள்ளார்கள்.

இதே சங்ககாலத்தில் ஆத்தூர் தாலுகாவிலுள்ள கொல்லிமலைப் பிரதேசங்கள் சேர ராஜ்யத்தோடு சேர்ந்திருந்தன. இங்கு மாந்தாரம் சேரல் இரும்பொறை என்னும் ஒரு சேர இளவரசன் ஆண்டுகொண்டிருந்தான். ஆகவே சங்ககாலத்தில் சேரர்கள் கொங்கு தேசத்தையும் நமது ஜில்லாவின் தென்மேற்குப் பிரதேசங்களையும் கைக்கொண்டார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

தக்ஷணமும் பல்லவர் காலமும்.—சங்ககாலத்திற்குச் சற்று பிறகு, பல்லவர்கள் என்னும் கூட்டத்தார் சோழதேசத்து வடமூலையைப் பிடித்துக்கொண்டு, காஞ்சிபுரத்தில் தங்களுடைய ஆளுகையை வலுவாய் ஸ்தாபித்துவிட்டார்கள் (சுமார் கி. பி. 300–400). இவர்கள் நாளடைவில் (கி. பி. 400–600) நாடெல்லாம் படையெடுத்துவந்து எங்கும் வெற்றியடைந்து தென்னிந்தியாவில் ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்துவிட்டார்கள். பல்லவ மன்னர்களில் சிம்மவிஷ்ணு (சுமார் கி. பி. 570) என்னும் அரசன் மரபில் தோன்றியவர்களே பேர்போனவர்கள். இவர் மகன் மஹேந்திரன் (கி. பி. 600–630) மிகப் பிரஸித்தம் அடைந்தவன். இவன் பல்லவ அரசர்கள் எல்லோரிலுமே உயர்ந்தவன். இவன் தெலுங்குநாட்டில் சில பாகத்தையும், தொண்டை மண்டலத்தையும், சோழ நாட்டையும், கொங்கு தேசத்தையும் (கோயம்புத்தூரும் சேலம் ஜில்லாவில் பெரும்பாகமும்) பிடித்துக் கொண்டான். இவன் காலத்தில்தான் தென்னிந்தியாவில் முதல்முதல் கற்கோயில்கள் ஏற்பட்டன. இவன் கட்டுவித்த கோயில்களை மாமண்டூர், உண்டவல்லி (பெஜவாடா) மஹேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் (சேலம் ஜில்லா) முதலிய இடங்களில் காணலாம். ஆகையால் நமது ஜில்லாவில் பெரும்பாகத்தையும் மஹேந்திரன் கைக்கொண்டான் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

இது எப்படியிருந்தாலும் கி. பி. 717-ல் பட்டத்திற்கு வந்த நந்திவர்ம பல்லவ மல்லன் என்னும் பல்லவ அரசன் நமது ஜில்லாவையும், கொங்கு நாட்டையும் இப்பொழுது மைசூர்

ராஜ்யமாயிருக்கும் கங்காவடியையும் கைப்பற்றிக் கொண்டானென்பதற்கு ஐயமில்லை. இந்த விபரம் நந்திவர்மன் காலத்தில் கொடுக்கப்பட்ட உதயேந்திரம் சாசனத்தால் தெரியவருகிறது.[1]

சாளுக்கியரும் தேன்தேயங்களும்.-பல்லவர்கள் ஆளுகை தென்னிந்தியாவில் நிலைத்த பிறகு இவர்கள் ராஜ்யத்திற்கு வடக்கே சாளுக்கியர்கள் எனப் பேர்வழங்கும் ஒருவகைக் கூட்டத்தார் தங்கள் அரசாக்ஷியை வலுப்படுத்திவிட்டார்கள். இச்சளுக்க குலமன்னர்களில் மிகக் கீர்த்தி பெற்றவன் புளகேசி. இவன் அநேக நாடுகளை ஜெயித்து, வடஇந்தியாவில் அரசுசெலுத்திய ஹர்ஷா சக்கரவர்த்தியையும் போரில் தோற்கடித்து நர்மதை யாறுவரைக்கும் தன் தேசத்தைப் பரவச்செய்தான். போர்மதங்கொண்டவனுகி பல்லவ ராஜ்யத்தின்மீது படையெடுத்து மஹேந்திரனுக்குச் சொந்தமான வெங்கிதேசத்தையும் கைப்பற்றினுன்.[2] இச்சாளுக்கியர்களுக்கு வாதாபி அல்லது பாதாமி என்னும் ஊரே தலைநகரமாயிருந்தது.[3] புளகேசி காலமுதற்கொண்டே சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் பெரும்போர் விளைந்துகொண்டே யிருந்தது. மேற்சொன்ன நந்திவர்ம பல்லவமல்லன் காலத்திலும் சாளுக்கியர் காஞ்சியைத் தாக்கி அதைக்

[1] உதயேந்திரம் என்னும் ஊர் வடஆற்காட்டைச் சேர்ந்த திருப்பத்தூர் தாலூகாவிலிருக்கிறது. இத்தாலூகா முதலில் நமது ஜில்லாவைச் சேர்ந்திருந்தது. ஆனல் 1911-ம் வருஷத்தில் இதை வடஆற்காடு ஜில்லாவோடு சேர்த்துவிட்டார்கள்.

[2] வெங்கிநாடு கிருஷ்ண நதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையேயுள்ளது.

[3] இப்பொழுது வாதாபி நைஜாம் ராஜ்யத்திலிருக்கிறது.

கைக்கொண்டார்கள். இப்படி வெற்றி அடைந்த சாளுக்யவேந்தன் இரண்டாவது விக்கிரமாதித்தன். இவன் மகன் கீர்த்திவர்மனும் காஞ்சியைத் தாக்கினான். இந்தப் பல்லவ சாளுக்கிய யுத்தத்தினால் பல்லவராஜயம் சீர்குலைந்து மேன்மை குன்றிவிட்டது. பல்லவர்களுக்கடங்கிய அநேக குறுநில அரசர்களும் விடுதலைபெற்று சுய ஆட்சியை அடையப் பிரயத்தனப்பட்டார்கள்.

ராஷ்டிரகூடர்.—இது இவ்வாறு இருக்க தக்ஷிணம் என்று வழங்கும் பீடபூமியில் புதிதாக ஒரு குலத்தார் தங்கள் அரசாக்ஷியை ஸ்தாபித்தார்கள். இவர்களே ராஷ்டிரகூடர். இவர்களுடைய குலமுதல்வன் தந்திதுர்க்கன். இவன் சளுக்கிய வேந்தனாகிய கீர்த்திவர்மனை யுத்தத்தில் புறங்கொடுத்தோடச்செய்து சளுக்கராஜயத்தைக் கைப்பற்றிக்கொண்டான். ராஷ்டிரகூடரின் தலைநகரம் மல்கேத். இது இப்பொழுது நைஜாம் ராஜ்யத்திலிருக்கிறது.

பல்லவராஜ்யம் சின்னபின்னமானது.—சளுக்கருடைய ஆதீனம் குறைவுபட்டவுடனேயே தேசமெங்கும் குழப்பம் நேரிட்டது. நமது ஜில்லாவில் அநேக பாகங்களைக் கங்கபல்லவர்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று சரித்திர ஆராய்ச்சியில் தேர்ந்த ஒரு சாரார் கூறுகிறார். இதின் உண்மை எப்படியிருந்தாலும் சேலம் ஜில்லாவின் ஒரு தொகுதியாகிய பாரா மஹாலை, பாணர்கள் என்னும் கூட்டத்தார் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டில் அரசாண்டார்கள். இவர்கள் இந்த சமயத்தில் கங்கபல்லவர்களுக்குக் கப்பம்கட்டி வந்ததாக ராயக்கோட்டை சாஸனமூலமாய்த் தெரிகிறது.

பாதாமி ராஜ்யம் ராஷ்டிரகூடரால் அழி பட்ட உடனே மேற்கத்திக் கங்கையர் மைசூரைப் பிடித்துக்கொண்டார்கள். ஆனால் இவர்களை ராஷ்டிரகூட அரசனாகிய மூன்றாவது கோவிந் தன் ஜயித்து (கி. பி. 783–814) அவனுக்குக் கப்பம் கட்டும்படி செய்தான்.

அமோகவர்ஷன் ராஷ்டிரகூடன்.—கோவிந்த னுக்குப் பிறகு அமோகவர்ஷன் அரசாண்டான் (கி. பி. 814–877). இவன் நமது ஜில்லாவை அர சாண்ட பாணர்களோடும், கங்கபல்லவர்களோ டும் சண்டை சச்சரவில்லாமல் அமைதியாய்க் காலத்தைக் கழித்தான். இவனுக்குப் பிறகு ராஷ்டிரகூட ராஜ்யமும் வலி இழந்து க்ஷீணிக்க ஆரம்பித்தது. இதுதான் தருணமென்று சிற்றர சர்கள் கிளம்பினார்கள்.

காஞ்சிப் பல்லவர்கள் இப்பொழுது கையற்ற வர்களாயிருந்தார்கள். தென்புறமிருந்து பாண்டி யர்களும் வடபுறமிருந்து ராஷ்டிரகூடர்களும் இவர்களை நெருக்கிக்கொண்டு வந்தார்கள்.

பல்லவர்கள் அழிவும் சோழர்கள் தலையெடுப் பும்.—பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் கும்பகோணத்தருகில் திருபரம்பையம் என்னும் இடத்தில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. இதில் வரகுணபாண்டியன் தோல்வியடைந்தான். இது வரையில் பொட்டிப் பாம்புபோல் தலைசாய்ந் திருந்த சோழர்கள் இதுதான் தருணமென்று திடீரென்று கிளம்பினார்கள். சோழதேசத்து அர சனான ஆதித்யன் கி. பி. 894-ல் கொங்கு தேசத் தின்மேல் படையெடுத்து அதைப் பிடித்துக் கொண்டான். சேலம் திருச்செங்கோடு என் னும் தாலூகாக்களையும் இவன் பிடித்துக்கொண்

டான் என்று சொல்லுவதற்கு ஹேதுவாக இவ்விடங்களில் அவனுடைய சாஸனங்கள் இருக்கின்றன.

சோழ அரசர்கள்.—ஆதித்யன் மகன் பராந்தகன்: இவன் காலத்தில் நமது ஜில்லாவின் தென் பகுதி சோழ ராஜ்யத்தைச் சேர்ந்ததாயிருந்தது.

நோளம்பர்கள்.—பாரா மகாலில் பாணர்கள் அரசாக்ஷி செய்தார்கள் என்று முன்னமே சொன்னோம். இவர்களை நோளம்பர்கள் என்னும் கூட்டத்தார் பாரா மகாலினின்றும் துரத்திவிட்டார்கள். தர்மபுரியில் கண்டெடுத்த சாஸன மூலமாய் இந்நோளம்பர்கள் தர்மபுரியில் கி. பி. 932 வரையில் அரசாண்டார்களென்று தெரிகிறது.

ராஷ்டிரகூடர்களும் சோழர்களும்.—சோழர்கள் பல்லவ தேசத்தைக் கைப்பற்றிக்கொள்ள ராஷ்டிரகூடர்களுக்கும் இவர்களுக்கும் பெரும் போர் விளைந்தது. தக்ஷண பீடபூமிக்கும் தமிழ் தேசங்களுக்கும் இடையே யிருக்கும் நமது ஜில்லா எதிரிகளின் சேனையால் நாசமடைந்தது. ராஷ்டிரகூட அரசனாகிய கிருஷ்ணன் சோழ தேசத்தின்மேல் படையெடுத்து (கி. பி. 949-950) ஆர்க்கோணத்தருகிலுள்ள தக்கோலம் என்னும் ஊரில் சோழர்களைப் புறங்காட்டி யடித்ததுமன்றி, சோழராஜ குமாரனாகிய ராஜாதித்யனையும் கொன்றுவிட்டான். ஆனால் தக்கோலம் வெற்றிக்குப் பிறகு ராஷ்டிரகூடர்களுக்கு அடிசருக்கிக்கொண்டே வந்தது. கி. பி. 10-வது நூற்றாண்டில் இவர்கள் கங்கேய தேயத்தரசன் உதவியாலேயே தங்கள் கவுரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. இப்படி ராஷ்டிரகூடர்களுக்கு பேருதவிசெய்தவன்

மேற்குக் கங்கய அரசனுன மாரசிம்ஹன். விழும் சுவருக்கு முட்டுக்கொடுத்தாற்போல் மாரசிம் ஹன் எவ்வளவு முயன்றும் ராஷ்டிரகூடரை உயர்பதவியில் வைக்க முடியவில்லை.

கல்யாணி சாளுக்கியர்.—கிருஷ்ணன் III-கி.பி. 968-ல் இறந்தான். உடனே கல்யாணி என்னும் ஊரைத் தலைநகராக வைத்துக்கொண்ட மேற்குச் சாளுக்கியர்கள் தங்களுக்குப் பழைய சத்துருக் களான ராஷ்டிர கூடரை எதிர்த்து மறுபடி யும் சாளுக்க ஆளுகையை ஸ்தாபித்தார்கள். இப்பொழுது மறுபடியும் கிளம்பிய சாளுக்கர் களின் தலைவன் இரண்டாவது தைலன். இவன் ராஷ்டிரகூட நாட்டை எடுத்துக்கொண்டது மன்றி கங்கையர்களுடைய நாட்டையும் பிடுங்கிக் கொண்டான். நம்முடைய ஜில்லாவின் வடபாகத் திலுள்ள சில பாகங்களையும் இவன் சேர்த்துக் கொண்டான்.

ராஜராஜ சோழன்.—(கி. பி. 985—1014).— தைலன் கி.பி. 997-ல் இறந்தான். அதே வருஷத் தில் ராஜராஜ சோழன் ஒரு திக்குவிஜயம் செய்ய ஆரம்பித்தான். இவன் சோழராஜ்யத் தைத் தென்இந்தியா முழுவதிலும் பரவச்செய் தான். கங்காவடி, நோனம்பாவடி, குடகு, பெல் லாரி, வெங்கி முதலிய நாடுகளின்மீது படை யெடுத்து அவைகளை சோழ ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டான். பிறகு தெற்குநோக்கிப் படையெடுத்து இலங்கை, கொல்லம் முதலிய ஊர்களையும் கைக்கொண்டான். கலிங்கமும் சோழதேசத்தைச் சேர்ந்து விட்டது. கி. பி. 1004-ல் இவன் இரண்டாவது தடவை தக்ஷி ணத்தை நோக்கிப் படையெடுத்து கங்கையருக்

குத் தலைநகரான தலைக்காட்டைப் பற்றிக்கொண்டான். இப்படி திக்குவிஜயம் செய்த சோழ மகாராஜா கி. பி. 1014-ல் இறந்தான்.

ஆகவே நமது ஜில்லா இப்பொழுது சோழர்களுக்குச் சொந்தமாய்விட்டது.

நமது ஜில்லா சோழமண்டலமானது.—(கி. பி. 11-வது நூற்றாண்டு).–கி.பி. 11-வது நூற்றாண்டில் மேற்கத்திச் சாளுக்கியர்களுக்கும் சோழர்களுக்கும் எப்பொழுதும் சண்டை நேரிட்டுக்கொண்டிருந்தது. கங்காவடி நாடாகிய மைசூர் சீமை கைமாறிக்கொண்டே வந்தது. இருந்தாலும் இந்த நூற்றாண்டில் நமது ஜில்லா சோழர் வசமேயிருந்தது.

சோழர்கள் தங்கள் ராஜ்யத்தை ஆறு மண்டலங்களாகப் பிரித்தார்கள். ஒரு மண்டலத்தை அநேக நாடுகளாகவும் ஒரு நாட்டை அநேக கோட்டங்களாகவும் பிரித்து அரசாண்டார்கள். ஆனால் சேலம் ஜில்லாவிலுள்ள நாடுகளின் பிரிவுகளை கோட்டம் என்று சொல்லாமல் நாடுகளென்றே சொல்லிவந்தார்கள்.

நமது ஜில்லாவிலுள்ள தாலூகாக்கள் இரண்டு மண்டலங்களில் அடங்கியிருந்தன. நமது ஜில்லாவின் வடபாகம் நிகரிழிச் சோழமண்டலத்தைச் சேர்ந்திருந்தது. தெற்குப்பாகம் ஆதிராஜராஜமண்டலமாகிய [1] கொங்கு நாட்டைச் சேர்ந்துள்ளது.

ஹொய்சலர்கள்.—கி.பி. பன்னிரெண்டாவது நூற்றாண்டில் சாலா என்பவனை குலமுதல்வனாக வைத்துக்கொண்ட ஒரு கூட்டத்தார் பிரபலமான

[1] கொங்கு நாடென்பது தற்காலத்தில் காணப்படும் கோயம்புத்தூர் ஜில்லாவையும் சேலம் ஜில்லாவைச்சேர்ந்த தலக்காட்டையும் அடக்கியுள்ளது.

அந்தஸ்தையும் வீரியத்தையும் அடைந்தார்கள். இவர்களே ஹோயசல்யர். இவர்கள் குறுநில மன்னராய் மைசூரைச் சேர்ந்த பேலூரில்தங்கி மேற்கத்திச் சாளுக்கியர்களுக்குக் கப்பம் கட்டிவந் தார்கள்.

கி. பி. 1104-ல் பித்திதேவன் என்னும் வீரன் ஹோயசல்யருக்கு மன்னவனுனன். இவன் ஆதியில் ஜயினமதத்தைச் சேர்ந்தவன். இவனுடைய பேர்பெற்ற தளகர்த்தனுன கங்கராஜனும் அப்படியே. சோழர்கள் கங்காவடியைக் கைப்பற்றினதுமுதல் மதத்துவேஷம் கொண்டு அங்கிருக்கும் ஜைனர்களுக்கு அநேகவித இடையூறுகளை இழைத்துவந்தார்கள். இதைப் பொறுக்கமுடியாமல் ஹோயசல்யர்கள் இப்பொழுது சோழர்களை கங்காவடியினின்றும் துரத்த எத்தனித்தார்கள். முதல்முதல் பித்திதேவன் தன்னுடைய தலைநகரைப் பேலூரிலிருந்து ஹால்பீடுக்கு (அல்லது துவாரசமுத்திரத்திற்கு) மாற்றிக்கொண்டு பின் நோளம்பாடியின்மேல் படையெடுத்து அதை தன் கைவசப்படுத்திக் கொண்டான். புதிதாய் ஏற்பட்ட நாட்டில் தன் ஆளுகையைப்பலப்படுத்திக் கொண்டு கங்காவடியைத் தாக்கினன். கங்காவடி சோழராஜ்யத்தைச் சேர்ந்ததென்று முன்னமேயே சொன்னேம். இதைத் தர்மபுரியிலிருக்கும் ஒரு அதிகமான்சோழராஜாவிற்காக ஆண்டுகொண்டு வந்தான்.

பித்திதேவன் சோழ அதிகாரியாகிய அதிகமானைத் தலைக்காட்டில் தோற்கடித்து அந்நகரையும் எடுத்துக்கொண்டான். இதைத்தவிர கோலார், கோயத்தூர் (கோயம்புத்தூர் போலும்) கொங்கு முதலிய நாடுகளையும் வென்றுன். ஆயி

59110

னும் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த பாராமஹாலே யாவது தலேக்காட்டையாவது இவன் கைப் பற்றிக்கொள்ளவில்லை. இவைகள் இன்னொரு நூற்றாண்டு சோழர்கள் வசமேயிருந்தன.

இந்த வீரனாகிய பித்திதேவனுக்கு மற்றொரு பெயர் உண்டு. இவன் சரித்திரத்தில் விஷ்ணு வர்த்தனன் என்று வழங்கப்படுகிறான். இவன் வைஷ்ணவ ஆசாரியராகிய ஸ்ரீராமானுஜாசாரியாரின் உபதேசத்தால் வைஷ்ணவ மதத்தை மேற்கொண்டான். அதுமுதல் இவன் விசிஷ்டாத்துவைத மதத்தை ஹோயசல்ய ராஜ்யத்தில் ஸ்தாபித்தான். அதுபற்றியே அவனுக்கு விஷ்ணு வர்த்தனன் என்ற பெயர்வந்தது.

மேற்கூறியவிஷயங்கள்சோழன் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1070–1118) சம்பவித்தன.

பிற்காலச் சோழர்.—கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டிலேயே சோழர்கள் சீர்குலேந்துவிட்டார்கள். குலோத்துங்கனுக்குப் பிறகுவந்த சோழர்கள் வீரவெற்றி பெறுவதில் காலத்தைக் கழிக்காமல் வித்வான்களே ஆதரித்து வந்தார்கள். ராஜாதி ராஜன் II காலத்தில் (கி.பி. 1171–86) சோழர்கள் பாண்டிய நாட்டில் தலேயிடவும் நேரிட்டது. பாண்டிய தேசத்தில் பராக்கிரம பாண்டியனுக்கும் குலசேகர பாண்டியனுக்கும் விவாதம் உண்டாயிற்று. பராக்கிரம பாண்டியன் சிங்கள அரசனின் துணையைப் பெற்றான். சிங்களர் பாண்டிய நாட்டைப் படையெடுத்து அதிலுள்ள அநேக இடங்களேப் பிடித்துக்கொண்டார்கள். சோழர்கள் குலசேகரனுக்கே பட்டம் கொடுக்கவேண்டுமென்று கங்கணம்கட்டி சிங்களரை எதிர்த்தார்கள். அநேக இடங்களில்

பெரும்போர் விளைந்தது. கடைசியில் ராஜாதி ராஜனுக்குப் பிறகு ஆண்ட மூன்ருவது குலோத் துங்க சோழன் விக்கிரமபாண்டியன் என்பவனுக் குப் பட்டத்தைக் கட்டினுர். இதனுல் சோழர்கள் பாண்டிய தேசத்தினின்று துரத்தப்பட்டார்கள்.

இது இவ்வாறிருக்க, சோழர்களுக்கும் சிங்க ளர்களுக்கும் நேரிட்ட போரினுல் சோழர்களு டைய செல்வாக்கு நமது ஜில்லாவில் குறைந்தது. இதற்கு அறிகுறியாக தகதூரில் (தர்மபுரி) சோழ அதிகாரியாயிருந்த அதிகமான் சோழ அரசனைக் கட்டுப்படுத்தாமல் தன் சுய இச்சையாகவே சில சிற்றரசர்களோடு சில ஒப்பந்தங்களைச் செய்து கொண்டான்.

கல்யாணிச் சாளுக்கியரின் முடிவு.—மேற்கத்திச் சாளுக்கியர்கள் திடீரென்று கிளம்பி ராஷ்டிர கூடர்களின் ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டார் களென்று முன்னமேயே சொன்னேம். ஆனுல் இச்சாளுக்கியர்கள் வெகுகாலம் ராஜ்யபரிபால னம் செய்யவில்லை. இவர்கள் நாடுகளைத் தேவ கிரியில் அரசாண்ட யாதவகுல மன்னர்களும் துவாரசமுத்திரத்தில் தங்கள் தலைநகரை ஸ்தா பித்த ஹோயசல்யர்களும் பகுந்தெடுத்துக்கொண் டார்கள். கி. பி. 1191-ல் ஹோயசல்ய பெல்லால அரசன் தன் ஆளுகையை மைசூரில் பலமாய் ஸ்தாபித்துவிட்டான்.

பதின்மூன்ருவது நூற்ருண்டு.—இந்த ஆண்டில் இப்பொழுது பிரபலமடைந்த ஹோயசல்யர்க ளுக்கும் பாண்டியர்களுக்கும் அநேக போர்கள் நடந்தன. அதைப்பற்றி விபரமாய்ச் சொன்னுல் பக்கம் பெருகும். சுருக்கமாகச் சொல்லும்பக்ஷத் தில் இந்த ஆண்டில் சோழர்கள் கைவலிமை

யற்று ஹோயசல்யர் தயவுபெற்றே அரசாள வேண்டியிருந்தது. கி.பி. 1254 ல் வீரசோமேஸ்வரனென்ற ஹோயசல்ய அரசன் இறந்தான். இவனுடைய ராஜ்யத்தை இவன் பிள்ளைகள் இருவரும் பகிர்ந்து எடுத்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருவன் வீரராமநாதன். இவனுக்கு அநேக நாடுகள் சொந்தமாய்விட்டன. பொதுவாக திருச்சினப்பள்ளி ஜில்லாவிலிருந்து பெல்லாரி வரையில் இருக்கும் நாடுகளில் இவன் அரசு செலுத்திவந்தான். இவனுடைய சாஸனங்களில் அநேகம் தாரமங்கலம், ராயக்கோட்டை, அதமன்கோட்டை முதலிய இடங்களிலிருப்பதினால் நமது சேலம் ஜில்லா முழுவதுமே இவன் கையில் அகப்பட்டதென்று கருதவேண்டும்.

ஹோயசல்யர் ஆளுகை மைசூர், சேலம், பெல்லாரி முதலிய இடங்களில் வலுத்திருந்த சமயத்திலேயே பாண்டியர்கள் சோழர் கட்டினின்று விடுபட்டு மிகவும் வலுத்து ஹோயசல்யர்களையே தாக்க ஆரம்பித்தார்கள். உதாரணமாக கி.பி. 1275-ல் மதுரையை உபராஜாவாய் ஆண்டுகொண்டிருந்த ஜடவர்மன் சுந்தரபாண்டியன் II சேலம் தலைக்காட்டின்மீது படையெடுத்து ஜெயித்து, தாரமங்கலம், திருச்செங்கோடு என்னும் இடங்களில் சில சாஸனங்களையும் வெட்டுவித்துத் திரும்பிப்போனான்.

கி.பி. 14-ம் நூற்றுண்டு முகம்மதியர் வருகை.—கி.பி. 14-ம் நூற்றுண்டில் தென்னிந்தியாவில் நான்கு பெரிய வலுத்த ராஜ்யங்கள் இருந்தன. வடமேற்குத் திசையில் நர்மதையாற்றுத் தீரத்தில் யாதவர்கள் இருந்தார்கள். வடகிழக்கில் காகதீயர்களும், இந்த இரண்டு ராஜ்யங்களுக்குக்

கீழ் ஹோயசல்யர்களும் இவர்களுக்கும் தெற்கே பாண்டியர்களும் தத்தம் ஆளுகையை மிகவும் பலப்படுத்திக்கொண்டு வடக்கிலிருந்து சேனைகள் தென்னிந்தியாவில் நுழையாவண்ணம் காத்துக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்குள் ஒற்றுமையும், ஐக்கியமும் ஏற்பட்டிருந்தால் விந்திய பர்வதத்தை தாண்டி அன்னியர்கள் நமது தேசத்திற்கு வருவது அசாத்தியமாயிருந்திருக்கும். ஆனால் இந்து ராஜாக்களுக்குள் குரோதமும் விரோதமும் அதிகரித்தன. இதுதான் சமயமென்று ஏற்கனவே டில்லியில் தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்த முகம்மதியர்கள் திடீரென்று சைன்னியங்களைத் திரட்டி விந்திய பர்வதத்தைத் தாண்டி தென்னிந்தியாவிற்கு வந்து சூரையாடினார்கள்.

திருவிழாக்கூட்டத்தில் வெடிகுண்டு வெடித்தாற்போல் மாலிக்காபரும், மூபராக்கும், கையாசுடீனும், மகம்மதும் துருக்க சைன்னியங்களைத் திரட்டிக்கொண்டு ஹிந்து ராஜ்யங்களைப் பொடியாக்கிச் சிதற அடித்தார்கள். நடுநடுங்கிக் குலுங்கிய ஹிந்து ஸமஸ்தானங்கள் டாக்ளாக் வம்ஸத்தைச் சேர்ந்த முகம்மது என்னும் டில்லி சுல்தானுக்குக் கப்பம் கட்டும்படியாயிற்று.

விஜயநகர அரசாட்சி.—ஆனால் கொடுங்கோன் மன்னன் இருக்கும் நாட்டைவிடக் கடும்புலி வாழும் காடு நல்லதென்றல் போல டாக்ளாக் சுல்தான் செய்த கொரேங்களைப் பொறுக்கமுடியாமல் ஜனங்கள் காடுகளுக்குச் சென்றார்கள். இந்திய சிற்றரசர்களும் சுல்தான் இழைத்த இம்சையைச் சகிக்கமுடியாதவர்களாய் ஒருங்குகூடி இனித் துருக்கர்களுக்கு இடங்கொடுக்கக்கூடாதென்று நினைத்துப் புதிதாய் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்

தார்கள். இந்தவிதமாக ஒரு ஹிந்து சமஸ்தா னத்தை ஏற்படுத்துவதில் ஊக்கமாய்ப் பாடுபட்ட வர்கள் ஹரிஹரன், புக்கன் என்னும் இரண்டு சகோதரர்கள். இவர்கள் இதர இந்து ராஜாக் களின் உதவியைப்பெற்று ஸ்தாபித்த ராஜ்யமே உலகப் பிரஸித்திபெற்ற விஜயநகர ராஜ்யம்.

மேற்கூறிய காரணம்பற்றியே கல்பர்கா என் னுமிடத்தில் விஜயநகர ராஜ்யத்திற்கு வடக்கே பாமினி ராஜ்யம் துருக்கர்களால் ஸ்தாபிக்கப் பட்டது (கி. பி. 1347).

விஜயநகர அரசர்களுக்கும் பாமினி சுல்தான் களுக்கும் எப்பொழுதும் போர் விளைந்துகொண் டேயிருந்தது. இருந்தாலும் சுமார் இருநூறு வரு ஷங்களுக்கு துருக்க சைன்னியங்கள் தென்னிந் தியாவில் நுழையாமல் இந்து அரசர்களாகிய விஜயநகர மன்னர்கள் இந்துக்களைக் காப்பாற்றி வந்தார்கள். இவ்விஷயம் நமது ஜில்லாச் சரித் திரத்தை யொட்டியதில்லாததால் அவைகளை இங்கு விரித்து எழுதவில்லை.

சங்கம வம்ஸம்.—இந்த வம்ஸத்தைச் சேர்ந்த அரசர்கள் முதல்முதலில் விஜயநகர ராஜ்யத்தை ஆண்டார்கள். கி.பி. 1365–1366-ல் புக்கராயன், கம்பெண்ணவுடையார் என்னும் தளகர்த்தனை மதுரையில் மாலிக்காபரால் ஸ்தாபிக்கப்பட்ட துலுக்க சுல்தானைத் துரத்திவிட அனுப்பினான். கி. பி. 1384-க்கு முன் ஹரிஹரன் II என்னும் விஜயநகர அரசன் தன்னுடைய மகனான விரு பாக்ஷனை தெற்கே ஒரு பெரிய சைனியத்துடன் அனுப்பினான். இவன் தொண்டைமண்டலம், சோழ தேசம், பாண்டிய நாடு, இலங்கைத் தீவு முதலிய தேச அரசர்களைப் போரில் தோற்கடித்த

தாக வெற்றி கூறியிருக்கிருன். ஆகவே புக்கராயன் காலத்திலோ அல்லது ஹரிஹரன் காலத்திலோ நமது ஜில்லா விஜயநகர ராஜ்யத்தோடு சேர்ந்துவிட்டது. இதற்கொப்ப இரண்டாவது ஹரிஹரனுடைய புத்திரனை இம்மடி புக்கனின் சாஸனங்களும், தீர்த்தமலையில், தேவராயரின் அதிகாரியாகிய விஜயபூபதியின் சாஸனங்களும் இரண்டாவது தேவராயனுடையசாஸனங்களில் சிலவும் அகப்பட்டிருக்கின்றன.

விஜயநகரச் சரித்திரச் சுருக்கம்.—இரண்டாவது தேவராயன் கி. பி. 1451-ல் இறந்தான். அவன் இறந்த பிறகு உள்நாட்டில் அநேக குழப்பங்கள் உண்டாயின. சாளுவ வம்ச அரசர்களில் சிலரும், துளுவ வம்சத்தைச் சேர்ந்த சில அரசர்களும் விஜயநகரத்தை அரசாண்டார்கள். இவர்களில் முக்கியமானவர் கிருஷ்ணதேவராயர் என்பவரே. இவர் காலத்தில் உண்டான சில சாஸனங்கள் நமது ஜில்லாவில் தர்மபுரிக்கு மேற்கேயுள்ள இந்தூரிலும் திருச்செங்கோட்டிலும் இருக்கின்றன. கிருஷ்ணதேவராயருக்குப் பின்னுல் அரசாண்ட (கி. பி. 1529–1542) அச்சுத தேவராயருடைய சிலாசாஸனம் ஒன்று தாரமங்கலத்திலிருக்கிறது. இவருக்குப்பின் அரசாண்ட சதாசிவராயர் தன் மந்திரியாகிய ராமராயரின் சொற்படி நடந்துகொள்ளவேண்டியதாயிற்று. தாரமங்கலத்திலும் காரிமங்கலத்திலும் இவரையொட்டிய சில சாஸனங்கள் இருக்கின்றன.

கி. பி. 1565-ல் தலைக்கோட்டை யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் பாமினி சுல்தான்கள் எல்லாருமே ஒருங்குசேர்ந்து சதாசிவராயரைத் தோற்

கடித்து விஜயநகரத்தையும் சூரையாடி அழித்து விட்டார்கள்.

ஆகவே கி. பி. 1383-லிருந்து தலைக்கோட்டை யுத்தம்வரையில் நமது ஜில்லா விஜயநகர அரசர்களாலேயே ஆளப்பட்டு வந்தது. இனி தலைக் கோட்டை யுத்தத்திற்குப் பிறகு நமது ஜில்லாவின் நிலைமை எப்படியிருந்ததென்று விசாரிப் போம்.

விஜயநகரம் பின் சரித்திரம்.—தலைக்கோட்டைக் குப்பிறகு சதாசிவராயரும் அவர் மந்திரியான திருமலைராயரும் பேனுகொண்டாவிற்குச் சென்று அதையே தலைநகராகக் கொண்டார்கள். திருமலை பிறகு சதாசிவராயரைக் கொன்றுவிட்டு, தானே பட்டத்திற்கு வந்தான் (கி. பி. 1569-1570).

இப்பொழுது விஸ்தீரணத்தில் மிகக் குறைந்த விஜயநகர ராஜ்யம் ஆறுமாகாணங்களாகப் பிரிக் கப்பட்டது. அவைகள் பின்வருமாறு: (1) ஆந்திர நாடு, (2) கர்னுடகம், (3) மதுரை, (4) சந்திரகிரி, (5) ஜிஞ்ஜி, (6) தஞ்சாவூர். திருமலைக்குப்பின்வந்த அரசர்கள் தங்கள் ஆளுகையைச் செலுத்துவது கஷ்டமாயிற்று. கி. பி. 1586 முதற்கொண்டு கி. பி. 1614-வரை ராஜ்யமெங்கும் குழப்பமாயிருந்தது. மாகாண அதிகாரிகளாகிய ராஜப்பிரதிநிதிகளும் குறுநில மன்னர்களும் தங்களுடைய சுயஆட்சியைத் தங்கள் தங்களுடைய இடங்களில் ஸ்தாபித்துவிட்டார்கள். நமது ஜில்லாவிலும் குழப்பம் ஏற்பட்டு, பாகலூர் அங்குசகிரி, ஹோசூர் தென் கணிக்கோட்டை, சேலம், அமரகுண்டி முதலிய இடங்களில் குறுநில மன்னர்கள் தங்கள் அதிகாரத்தையே செலுத்திவந்தார்கள். பாராமஹாலையும் மைசூரில் சில பாகத்தையும் சென்னப்பட்ட

ணத்திலுள்ள (கிருஷ்ணகிரி தாலூகா) ஜெகதேவ ராயர்கள் ஆண்டுவந்தார்கள்.

மைசூரும் உடையார் வம்ஸமும்.—பேணு கொண்டாவில் புதிதாய் ஸ்தாபித்த விஜயநகர ராஜ்யம் சீக்கிரம் அழிவுற்றது. கி. பி. 1612-ல் மைசூரிலிருந்த ராஜஉடையார் என்பவர் ஸ்ரீரங் கப்பட்டணத்தைக் கைப்பற்றிக்கொண்டு மைசூர் ராஜ்யத்தை ஸ்தாபித்தார். உடையார் அக்கம் பக்கங்களில் உள்ள நாடுகளையும் ஜகதேவராயர் களுக்குச் சொந்தமான சில இடங்களையும் (மைசூ ரில்)தனதாக்கிக்கொண்டார். இவருடையபேரன் சாமராஜ உடையார். இப்பொழுது காணப்படும் மைசூர் மாகாண முழுவதிலும் இவர் தன் ஆளு கையை வலுப்படுத்திக்கொண்டார்.

மதுரை நாயக்கர்கள்.—மதுரை விஜயநகர ராஜ் யத்தில் ஒரு பெரிய மாகாணமாயிருந்தது. விஜய நகரப் பிரதிநிதிகளாய் இதை அரசாண்டுவந்த வர்கள் நாயக்கர்கள். நாயக்கர் வம்ஸத்தை முதல்முதலில் மதுரையில் ஸ்தாபித்தவர் விஸ்வ நாத நாயக்கர். இவருக்கு ஒரு புத்திகூர்மை யுள்ள மந்திரி இருந்தார். அவரே அரியநாயக முதலியார். இவர் நாயக்கர் ஆண்ட தேசத்தை அநேக பாளையங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாளையத்தை ஒரு பாளையக்காரரிடம் ஒப்புவித் தார். விஸ்வநாதனுக்குப் பிறகு அநேக நாயக் க்ர்கள் மதுரையை அரசாண்டார்கள். அவர் களில் முக்கியமானவர் திருமலைநாயக்கர். இவர் காலத்தில்தான் நாயக்கர்கள் தங்கள் ஆளுகை யை சுயஆட்சியாய் நிலைநிறுத்தினார்கள்.

திருமலைநாயக்கர் (கி. பி. 1623—1659).—ஒரு பெரிய ராஜதந்திரி. இவர் அநேக ஊர்களைத்

தன் ராஜ்யத்தோடு சேர்த்துவிட்டார். இவர் இறக்கும்போது தற்காலத்தில் காணப்படும் திருச்சினுப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களும் புதுக்கோட்டை ஸமஸ்தானமும் இவருக்குச் சொந்தமாயிருந்தன. ஆகவே நமது ஜில்லாவில் சில பாகங்கள் இவர் காலத்தில் மதுரை நாயக்கர்களுக்குள் அடங்கியிருந்தன.

மதுரை நாயக்கர்களுக்குக்கீழ் 72 பாளையக்காரர்கள் இருந்தார்கள். அவர்களில் இருவர் நமது ஜில்லாவிலிருந்தார்கள். அவர்களே ராமச்சந்திர நாயக்கரும் கொங்குதேசத்தைச் சேர்ந்த கட்டி முதலியாரும். முதலியாருக்குக் காவேரிக் கரையிலுள்ள காவேரிபுரமும் தாரமங்கலமும் முக்கியமான இடங்கள். ஓமலூர், ஆத்தூர் என்னும் கோட்டைகளும் இவர்களிடமிருந்தன. சேலத்தில் சென்னப்ப நாயக்கர் என்னும் பாளையக்காரர் இருந்தார்.

மதுரைக்கும் மைசூருக்கும் யுத்தம்.—திருமலை நாயக்கர் தேசமும் மைசூர் சீமையும் ஒன்றுக்கொன்று ஒட்டியே இருந்தன. மைசூர் அரசனுன சாமராஜன் திருமலை காலத்தில் கோயம்புத்தூரைத் தாக்கி மதுரைக்கு அடுத்த திண்டுக்கல் வரையில் போனுன். ஆனுல் ராமப்பய்யன் என்னும் நாயக்க தளகர்த்தன் மைசூர் சேனைகளைத் துரத்திவிட்டான்.

ரேங்கராயரும், திருமலையும்.-இப்பொழுதுங்கூட விஜயநகர வம்சத்தரசர்கள் இருந்தார்கள். இவர்களில் ரெங்கராயர் என்பவர் மதுரை, தஞ்சாவூர், ஜிஞ்ஜி என்னுமிடங்களை இழக்க மனமில்லாதவராய் பெரிய சைனியங்களைத் திரட்டிக்கொண்டு



திருமலை நாயக்கர்.

திருமலை நாயக்கரைத் தாக்கவந்தார். ஆனால் என்ன? மேற்கூறிய மூன்று நாட்டு நாயக்கர்களும் ஒருங்கு சேர்ந்துகொண்டார்கள். ராயர் மைசூர் ராஜாவின் உதவிபெற்று தஞ்சாவூரைத் தாக்கி அங்கிருக்கும் நாயக்கரைத் தனக்குப் பணியும்படி செய்தார். உடனே ராயரும் மைசூர் சேனையும் ஜின்ஜிக்கோட்டையை எதிர்த்தார்கள். பயந்து திருமலை, கோல்கொண்டா சுல்தானுடைய உதவியைத் தேடினார். கோல்கொண்டா சுல்தானும் வந்துவிட்டான். ரெங்கராயர் என்ன செய்வார் பாவம்! துருக்கருக்குப் பயந்து மைசூருக்கு ஓடிப் போய்விட்டார். கோல்கொண்டா சுல்தான் இதுதான் சமயமென்று ஜின்ஜியைத் தாக்கினான். பிறகு மதுரையையும் தஞ்சாவூரையும் பொடியாக்க நினைத்தான். கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதென்று திடுக்கிட்டு திருமலை கோல்கொண்டா சுல்தானுக்கு எதிரியான பீஜபூர் சுல்தானை ஏவி இந்த இரண்டு சுல்தான்களுக்கும் சண்டை மூட்டிவிட்டான். ஜின்ஜிக்குச் சமீபத்தில் இரண்டு துருக்க சைனியங்களும் வந்தன. ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் போர் செய்யாமல் "நாம் ஏன் இந்துக்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும். நாமிருவரும் சேர்ந்து நாயக்க அரசர்களை வசப்படுத்துவோம்" என்று சபதம் கூறி ஜின்ஜிக்கோட்டையைத் தாக்கினார்கள். திருமலை தோல்வியுற்று பீஜபூர் சுல்தானுக்குக் கப்பம் கட்டுவதாய் ஏற்றுக்கொண்டான் (கி. பி. 1644).

**பீஜபூரும் சேலம் ஜில்லாவும்.**—திருமலை வேண்டுகோளால் வந்த பீஜபூர் சுல்தான் சீரங்கப்பட்டணத்தைத் தாக்க முயன்றான். அது முடியாமல் பங்களூரை எதிர்த்து அதைப் பிடித்துக்கொண்

டான். பிறகு மைசூரின் வடபாகத்தையும், கிழக்கு பாகத்தையும் எடுத்துக்கொண்டான். இந்தசமயத்தில்தான் சேலம் ஜில்லாவைச்சேர்ந்த பாராமஹாலையும் தனதாக்கிக்கொண்டான் (கி. பி. 1644).

கங்டீரவ நரசராஜா.—இவர் மைசூரில் ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். இவர் பெரிய போர் வீரர். இவர் கி. பி. 1641-ல் கட்டி முதலியாரிடமிருந்து அநேக யிடங்களைப் பிடுங்கிக்கொண்டார். கி. பி. 1647-ல் பீஜபூர் சுல்தானுக்குச் சொந்தமான பாராமஹாலில் மேற்குப்பாகத்தை எதிர்த்து மைசூரோடு சேர்த்துவிட்டார்.

இடிபால் ராவ் என்பவனிடமிருந்து ரத்னகிரி, தென்கணிக்கோட்டை என்னும் ஊர்களையும் சந்திரசங்கர் என்பவனிடமிருந்து ஹோசூரையும் எடுத்துக்கொண்டார்.

தோட்டதேவராயனும் சிக்கதேவராயனும்.—மேலே குறிப்பிட்ட கந்டீரவ நரசராஜா கி பி. 1659-ல் இறந்தான். அவனுக்குப் பிறகு தொட்ட தேவராயனும் (கி. பி. 1659—1672), இவனுக்குப் பிறகு சிக்கதேவராயனும் (கி. பி. 1672-1704) மைசூர் பட்டத்தை வகித்தார்கள். சிக்கதேவராயர் காலத்தில் மகாராஷ்டிரர்களால் அநேக துன்பங்கள் விளைந்தன. பேர்பெற்ற சிவாஜி மகாராஜ் கி. பி. 1677 ல் ஜின்ஜிக்கோட்டையைத் தாக்கி தெற்குநோக்கி வந்தார். கொஞ்ச வருஷங்களுக்குள் பாராமஹாலும் தலைக்காட்டும் இவர் கைவசம் இருந்ததுபோலும். இது எப்படியிருந்தாலும் கி. பி. 1688-89-ல் சிக்கதேவராயன் பாராமஹாலின்மேல் படையெடுத்து, தர்மபுரி, மனுகொண்டா, ஓமலூர், பரமதி முதலிய இடங்களைத் தன் ராஜ்யத்தோடு சேர்த்துவிட்டது

மன்றி ஒரு உடன்படிக்கைப்படி காவேரிப்பட்டணம் அனந்தகிரி (ஆத்தூர்) என்னுமிடங்களையும் வாங்கிக்கொண்டான்.

ஆகவே எதிரிகளின் சைனியங்களினுல் படாத பாடுபட்ட நமது ஜில்லா பூருவும் கி. பி. 1704-ல் மைசூர் மன்னனுகிய சிக்கதேவராயனுக்குச் சொந்தமாயிருந்தது.

மோகலாயர் வருகை.—பாமினி சுல்தான்கள் போர்புரிந்து இந்து ராஜ்யங்களைப் பொடியாக்கிக்கொண்டிருக்கும் தருணத்தில் ஏற்கனவே தங்கள் ஆளுகையை வட இந்தியாவில் பலப்படுத்திய மொகலாயர்கள் தென்னிந்தியாவை நோக்கிவர ஆரம்பித்தார்கள். இவர்கள் கி. பி. 1687-ல் பீஜபூரைத்தாக்கி அதைத் தங்கள் ராஜ்யத்தோடு சேர்த்துவிட்டார்கள். அதற்கடுத்த வருஷத்தில், கி.பி. 1688-ல், கோல்கொண்டாவை எடுத்துக்கொண்டார்கள். மேற்கூறிய பீஜப்பூர் கோல்கொண்டாவைச் சேர்ந்த நாடுகளைத் தனக்காக ஆளும்படி குவாஸிம்கான் என்னும் அதிகாரியை அவுரங்கசீப் என்னும் மொகலாய அரசன் கி. பி. 1690-ல் நியமித்தான். இந்த நாடுகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன.

(1) கர்ளுடிக் ஹைதரபாத் பாலகாட், (2) கர்ளுடிக் ஹைதரபாத் பேயின்காட் (இது குண்டூரிலிருந்து கொள்ளிடம் வரையில் எட்டியது), (3) கர்ளுடிக் பீஜப்பூர். கி. பி. 1691-ல் கர்ளுடிக் பேயின்காட்டில் சுல்பிகர்கான் என்னும் மோகல் அதிகாரி அதிகாரம் செலுத்தினுன். பிறகு குவாசிம்கான் இறந்தவுடன் இவனே மேலேகூறிய மூன்று மாகாண விவகாரங்களைப் பார்த்து வந்தான்.

மோகல்ராஜ்ய சின்னம்.—கி. பி. 1707-ல் அவுரங்கசீபு இறந்தான். அவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவர்கள் சாமர்த்திய சாலிகள் அல்லர். ஆகையால் தென்தேயங்களை அரசாண்ட மோகல் அதிகாரிகள் மெள்ள மெள்ள தைரியங் கொண்டு டில்லி அரசாட்சிக்கு கட்டுப்படுவதற்கு இஷ்டமில்லாதவர்களாயிருந்தார்கள். டில்லி அரசரின் பிரதிநிதியாயிருந்து தென்னாடுகளை அரசாண்ட கனவானுக்கு நைஜாம் என்று பெயர். இவருடைய அதிகாரத்தின்கீழ் அநேக நவாபுகள் இருந்தார்கள். இவர்களில் சாடர் உலாகானும் அமீன்கானும் ஒருங்குசேர்ந்து மைசூரைக் கொள்ளையடிக்க எத்தனித்தார்கள். இந்தக் கெட்ட எண்ணத்திற்கு உடந்தையாயிருந்தவர்கள் கடப்பா, கர்னூல், சவனூர் என்னும் இடங்களைச் சேர்ந்த நவாபுகளும், கூட்டியில் இருந்த மகாராஷ்டிர தளகர்த்தனாகிய மொராரிராவுமேயாம்.

ஆனால் மைசூரின் நிலைமை என்ன? சிக்க தேவராஜனுக்குப் பிறகு அவன் ஊமைப்பிள்ளை பட்டத்திற்கு வந்தான். ராஜ்ய கார்யங்களைச் சமஸ்தான மந்திரிகளே நடத்திவந்தார்கள். அதுமுதல் மந்திரிகளின் கையில் அகப்பட்ட பொம்மைபோல் மைசூர் அரசர்கள் ஆகிவிட்டார்கள். திருட்டெண்ணம நிறைந்துள்ள நவாபுகள் ஒரு கோடி ரூபாய் வரையில் மைசூர் பொக்கிஷத்தினின்றும் எடுத்துக்கொண்டார்கள்.

**கடப்பை நவாப் அப்துல் நாபிகான்.**—கடப்பையில் அதிகாரம் செலுத்திவந்த நவாபுவிற்கு அப்துல் நாபிகான் என்று பெயர். இவன் மற்ற நவாபுகளைக்காட்டிலும் பேராசையுள்ளவன். இவன் நைஜாமுக்கு அடங்கினவனாயினும் சிறுகச் சிறுக

அநேக நாடுகளைத் தனக்குத்தானே எடுத்துக் கொண்டான். கி. பி. 1714-ல் நமது ஜில்லாவைச் சேர்ந்த பாராமஹாலைத் தன் ஊரோடு சேர்த்துக் கொண்டான். கி. பி. 1748-ல் நமது ஜில்லா இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் கடப்பை நவாபுக்கும் மற்றொரு பாகம் மைசூருக்கும் சேர்ந்ததாக இருந்தது.

நைஜாமுல்-முல்க்.—நைஜாமுல்-முல்க் கி. பி. 1748-ல் இறந்தார். இவர் இறந்தவுடனே இவர் பட்டத்திற்கு போட்டி ஏற்பட்டது. இந்த விவகாரத்தில் ஏற்கனவே நமது ராஜதானியில் வர்த்தகர்களாய் அமர்ந்துள்ள இங்கிலீஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும் கலந்துகொண்டு தங்களுக்குள் விரோதம் பாராட்டிக்கொண்டு வந்தார்கள். தற்சமயம் மைசூரில் மந்திரியாயிருந்தவர் நஞ்சராஜ என்பவர். இவர் இரண்டு கக்ஷியாரோடும் சேர்ந்து கலகத்தை விருத்திசெய்து கொண்டுவந்தார். இதனால் மைசூர் கஷ்டத்தை யடைந்ததே தவிர வேறில்லை. மைசூரிலும் குழப்பம் நேரிட்டது. இக்குழப்பத்திலிருந்து ஹைதர் ஆலி என்னும் ஒரு தளகர்த்தன் மிகவும் பிரபலத்திற்கு வந்தான்.

ஹைதர் ஆலியும் பாராமஹாலும், மைசூரும்.—இக்குழப்பத்திற்கு மத்தியில், ஹைதர் ஆலி கி. பி. 1760-ல் பாராமஹாலைக் கடப்பை நவாபிடமிருந்து பிடித்துக்கொண்டான். பிறகு பிரெஞ்சுக்காரரோடு சேர்ந்துகொண்டு அவர்களுடன் ஒரு உடன்படிக்கையுஞ் செய்துகொண்டான். இதற்குள் மகாராஷ்டிரர்களும் மைசூர் ராஜாவும் ஒருங்குசேர்ந்து ஹைதரைத் தாக்க, ஹைதர் பயந்து மகாராஷ்டிரர்களுக்கு 3 கோடி ரூபாயும் பாராமஹாலையும் தந்து அவர்களுடைய தயவைச்

சம்பாதித்துக்கொண்டான். ஆகவே ஹைதர் மைசூரை எதிர்ப்பது எளிதாயிற்று. அவனும் அவனுடைய மைத்துனனும் மைசூரை எளிதில் பிடித்துக்கொண்டுவிட்டார்கள் (கி. பி. 1761).

மைசூர் யுத்தங்கள்.—முதலாவது யுத்தம் கி. பி. 1767—1769. ஹைதர் கி. பி. 1766-ல் மைசூர் இளவரசனைச் சிறையிலிட்டுத் தானே அரசாண்டான். மேலும் மகாராஷ்டிரர்களுக்குச் சொந்தமான சில இடங்களையும் பிடித்துக்கொண்டான். அவன் நைஜாமையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. ஆகவே நைஜாமும் மகாராஷ்டிரர்களும் ஒன்றுசேர்ந்து ஹைதரை மைசூரினின்றும் துரத்திவிட எத்தனித்தார்கள். இதன்மூலமாய் விளைந்த போருக்கே முதலாவது மைசூர் யுத்தம் என்று சொல்லுவது. இந்த யுத்தம் நமது ஜில்லா எல்லைக்குள்ளேயே நடந்தது.

இந்த யுத்தத்தில் இங்கிலீஷ்காரர்கள் நைஜாமோடு கி பி. 1766-ல் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி அவர்பக்ஷம் சேர்ந்து ஹைதர் ஆலியை எதிர்த்தார்கள். இப்படி உதவும் இங்கிலீஷ்காரருக்கு நைஜாம் சர்க்கார்ஸ் ஜில்லாக்களை (Northern Circars) குத்தகையாகக் கொடுத்துவிட்டான்.

ஆனால் ஹைதர் மிக்க தந்திரசாலி. இவன் மகாராஷ்டிரர்களுக்கும் நைஜாமுக்கும் பெரும் லஞ்சம்கொடுத்து இங்கிலீஷ்காரரோடு சேராதபடி பண்ணிவிட்டான். ஆகையால் நைஜாமுக்கும் ஹைதருக்கும் ஏற்பட்ட போர் இங்கிலீஷ்காரருக்கும் ஹைதருக்குமாய் முடிந்துவிட்டது.

யுத்த ஆரம்பத்தில் இங்கிலீஷ்காரர் பாராமஹாலைப் பிடித்தார்கள். செங்கம், திருவண்ணா

மலையென்னும் இடங்களில் பெரும்போர்கள் நடந்தன. இவைகளில் ஆங்கிலேயரே ஜெயித்தார்கள். கடைசியில் ஹைதர் இங்கிலீஷ்காரரை பாராமஹாலினின்று துரத்தியதுமன்றி பட்டணத்திற்குத் தெற்கேயுள்ள திண்டுக்கல் வரையிலுள்ள கோட்டைகளையும் பிடித்துக்கொண்டான். பிறகு சென்னப்பட்டணத்திற்கே சென்றுவிட்டான். சென்னை கவர்னர் பீதியடைந்து ஹைதரோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார் (கி. பி. 1769, ஏப்ரல் 3).

இரண்டாவது மைசூர் யுத்தம்.—இங்கிலீஷ்காரருக்கும் ஹைதருக்கும் இரண்டாவது யுத்தம் நடந்தது (கி. பி. 1780—84). இந்த யுத்தத்திலும் இங்கிலீஷ்காரர் தோல்வியடைந்தார்கள். சேலம் ஜில்லா முழுவதும் ஹைதர் கையிலேயே யிருந்தது.

மூன்றாவது மைசூர் யுத்தம்.—மூன்றாவது மைசூர் யுத்தம் கி. பி. 1790-ல் நடந்தது. இந்த யுத்தம் ஹைதர் ஆலியின் மகனை டிப்பு சுல்தானால் ஏற்பட்டது. இந்த யுத்தத்தில் நைஜாமும் மகாராஷ்டிரரும் இங்கிலீஷ்காரரோடு சேர்ந்து டிப்புவின் கொட்டத்தை ஒடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். சண்டை ஆரம்பத்தில் இங்கிலீஷ் சைன்யங்களுக்கு அபஜெயமே ஏற்பட்டது. ஆனால் கடைசியில் இங்கிலீஷ்காரர்களே ஜெயித்தார்கள். கி. பி. 1792-ல் டிப்பு இங்கிலீஷ்காரர் காலில் விழுந்துவிட்டான். இதன்பிறகு நேரிட்ட உடன்படிக்கைப்படி ஹோசூர் தாலூகா நீங்கலாக சேலம் ஜில்லா முழுவதும் கம்பெனிக்காரர்களுக்குச் சொந்தமாய்விட்டது. கம்பெனியார் நாட்டைக் கைபற்றி அங்கங்கே சைன்னியங்களை வைத்துவிட்டார்கள். நமது ஜில்லாவிற்கு முதல்

முதல் கலெக்டராக நியமிக்கப்பட்டவர் (Captain Read) காப்டென் ரீட்துரை. இவர் கிருஷ்ணகிரியில் தங்கி ஒரு பெரிய சைன்னியத்தின் உதவி கொண்டு நாட்டைப் பத்திரப்படுத்தினுர். பெண்ணகரம், சங்கரிதுர்க்கம், சேலம் முதலிய இடங்களிலும் கம்பெனியார் படைகள் இருந்தன.

நான்காவது மைசூர் யுத்தம்.- கி. பி. 1799. இந்த யுத்தத்திலும் டிப்பு சீரங்கப்பட்டணத்திலும் இன்னும் அநேக இடங்களிலும் தோற்கடிக்கப்பட்டான். இந்த யுத்தத்தின் பிறகே ஹோசூர், தென்கணிக்கோட்டை. கேலமங்கலம், வெங்கடகிரி கோட்டை, ஆலம்பாடி என்னும் தாலூகாக்களும் பாகலூர் பேரிகை, சூலகிரி முதலிய பாளையங்களும் சேலம் ஜில்லாவோடு சேர்க்கப்பட்டன.

கி. பி. 1800-ம் வருஷம் முதல் நாளது தேதி வரை சேலம் ஜில்லா இங்கிலீஷ்காரர் கைவசமிருந்து தற்காலத்தில் நமது மாக்ஷிமை தங்கிய ஐந்தாம் ஜியார்ஜ் மன்னருடைய ஆளுகையின் கீழே இருந்துகொண்டு வருகின்றது.

## XII. ஜில்லா அரசாட்சி

பிரிட்டிஷ் அரசாட்சி.—நமது தேசமாகிய இந்தியாவை அரசாட்சி செய்கிறவர் மாக்ஷிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தியே. இவர் ஆளுகைக்குள் அநேக தேசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு ராஜப்பிரதிநிதி இருக்கிருர். நமது தேசத்திலிருக்கும் ராஜப்பிரதிநிதிக்கு 'வைஸ்ராய்' அல்லது 'கவர்னர் ஜெனரல்' என்று பெயர். இந்த அதிகாரத்தை தற்காலம் வகிப்பவர் லார்ட் இர்வின் என்னும் பிரபு.

இந்தியா ஒரு பெரிய தேசம். ராஜாங்கத்திற்கு உரிய விஷயங்களையெல்லாம் ஒருவரே பார்க்க முடியாது. ஆகையால் இந்தியாவை அநேக மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு கவர்னரை நியமித்து அவரை ஆளும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது சென்னை ராஜதானியில் கவர்னராயிருப்பவர் ஸர் ஜார்ஜ் பிரெடரிக் ஸ்டான்லீ என்னும் பிரபு.

**மாகாண அரசாட்சி.**—சென்னை கவர்னருக்கு உதவியாயிருந்து மாகாணப் பரிபாலனம் செய்வதற்கு இரண்டு சபைகள் இருக்கின்றன. ஒன்று மிகச் சிறிய சபை. இதற்கு 'எக்ஸிக்யூடிவ் கவுன்சில்' அதாவது காரியநிர்வாக சபை என்று பெயர். இப்பொழுது இச்சபையில் கவர்னரைத் தவிர நான்கு மெம்பர்கள் இருக்கின்றார்கள். மற்றொரு சபையார் பொது ஜனங்களின் க்ஷேமத்திற்காக அப்பொழுதைக்கப்பொழுது வேண்டிய சட்டங்களை ஏற்படுத்துவார்கள். இச்சபைக்கே 'லெஜிஸ்லேடிவ் கவுன்சில்' என்று பெயர். இச்சபையில் உள்ளவர்கள் அநேகமாய் ஜில்லாப் பிரதிநிதிகளே. இப்பிரதிநிதிகளுக்குள் செல்வாக்கும் சாமர்த்தியமும் உள்ள மூன்று பேர்களை கவர்னர் மந்திரிகளாக தேர்ந்தெடுப்பார். இம்மூன்று மந்திரிகளும் மேற்கூறிய காரிய நிர்வாக சபையார்களோடு சேர்ந்து ஆலோசனைசெய்து கவர்னருக்குத் தேசபரிபாலனம் செய்ய உதவி புரிந்து வருவார்கள். இம்மூன்று மந்திரிகளும் நான்கு காரியநிர்வாக சபையார்களும் சேர்ந்த சபைக்கு காபினெட் என்று பெயர்.

**சேலம் ஜில்லாவும் அதிலுள்ள தாலூகாக்களும்.**—ஒவ்வொரு மாகாணமும் பல ஜில்லாக்க

ளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சென்னை ராஜ தானியை 26 ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் நமது சேலம் ஜில்லா ஒன்று.

சேலம் ஜில்லா பத்துத் தாலூகாக்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன: (1) சேலம், (2) ஆத்தூர், (3) தர்மபுரி, (4) ஹொசூர், (5) ஊத்தங்கரை, (6) கிருஷ்ணகிரி, (7) நாமக்கல், (8) ஓமலூர், (9) ராசிபுரம், (10) திருச்செங்கோடு.

ஜில்லா அரசாட்சி, கலெக்டர்.—நமது ஜில்லாவிற்குரிய சகல விவகாரங்களையும் மேல்பார்த்து வரும் உத்யோகஸ்தருக்கு 'கலெக்டர்' என்று பெயர். அநேகமாய் 'ஐ. ஸி. எஸ்' என்ற பரீக்ஷையில் தேறினவர்களே இந்த அதிகாரத்தை வகிப்பர். இந்தப் பரீக்ஷை இப்பொழுது இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடைபெறுகிறது. இப்பரீக்ஷையில் தேறியவர்களை முதலில் கீழ் உத்தியோகங்களை வகிக்கச்செய்து அவர்கள் ரெவினியூ விவகாரங்களில் தேர்ச்சியடைந்த பிறகு ஜில்லா கலெக்டராக நியமிப்பது வழக்கம். இப்பரீக்ஷையில் தேறாத சில இந்தியர்களையும் கலெக்டராக நியமிப்பதும் உண்டு. இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் ரெவினியூ கிரிமினல் விவகாரங்களில் அதிக அனுபவம் உடையவர்களாயிருப்பார்கள்.

கலெக்டருக்கு பொறுப்பான கடமைகள் அநேகம் உள. ஜில்லாவைச்சேர்ந்த கிராமங்களின் தீர்வைகளை வசூல் செய்வதும் ஜில்லாவை பந்தோபஸ்து செய்வதும் இவருடைய முக்கியமான கடமைகளாம். இக்கஷ்டமான காரியங்களை ஒருவரால் செய்யமுடியாதல்லவா? ஆகையால் இவருக்கு உதவியாக அநேக உத்யோகஸ்

தர்களையும் அநேக இலாகாக்களையும் துரைத் தனத்தார் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவர்களைப்பற்றியும் சில இலாகாக்களைப்பற்றியும் சுருக்கமாகப் படிப்போம்.

ஜமீன் அயன் கிராமங்கள்.—நமது ஜில்லாவில் ஜனங்கள் அநேகமாய் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். பட்டணவாசிகளின் தொகை மிகக் குறைவே. கிராமங்களில் இருவகையுண்டு. சில கிராமங்கள் ஜமீன்தார்களுக்குச் சொந்தம்; மற்றவைகள் துரைத்தனத்தாருக்கு உரியவைகள். ஜமீன்தார்கள் தங்கள் கிராமங்களிலிருந்து தாங்களே தீர்வையை வசூல்செய்து கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பேஷ்கிஷை கலெக்டருக்கு வருஷாவருஷம் குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்திவிடுகிறார்கள். சேலம் ஜில்லாவில் அநேக ஜமீன்தார்களும் மிட்டாதார்களும் இருக்கிறார்கள். நாமக்கல் தாலூகா நீங்கலாக நமது ஜில்லாவில் 149 மிட்டாதார்கள் இருக்கிறார்கள். நாமக்கல் தாலூகாவில் மாத்திரம் 269 மிட்டாதார்கள் இருக்கிறார்கள். முற்கூறிய மிட்டாதார்கள் சர்க்காருக்கு வருஷாவருஷம் 2,86,634 ரூபாய் வீதம் பேஷ்கிஷ் கட்டுகிறார்கள்.

## கிராம உத்யோகஸ்தர்கள்

ரேவினியூ இலாகா.—ஜமீன் அல்லாத அயன் கிராமங்களில் உள்ள குடியானவர்கள் கலெக்டருக்கு நேராகவே குறிப்பிட்ட வரியைச் செலுத்துகிறார்கள். கிராமங்களில் இந்நிலவரியை வசூல் செய்யும் அதிகாரிக்கு 'கிராம முனிசீப்' என்று பெயர். இவர் கிராமத்தில் ஒரு சிற்றரசர்போலிருந்து அதிகாரம் செலுத்துகிறார். கிராமத் தீர்

வையை வசூல் செய்வதன்றி, கிராமத்தில் குற்றம், களவு, கொலே முதலியவைகள் நேரிடாமல் பார்த்துவருகிருர். இவருக்கு சில குற்றவாளிகளே விசாரித்து தண்டனேவிதிக்க அதிகாரம் உண்டு. இருபது ரூபாய்க்குள் உள்ள சிவில் வழக்குகளே யும் இவர் விசாரிப்பார். குளம் குட்டைகளேக் கவனிப்பதும், தொத்துவியாதி வராவண்ணம் ஊரைச் சுத்தமாய் வைத்திருப்பதும், அப்படித் தொத்துவியாதி வந்துவிட்டால் அதைத் தடுப்ப தற்கு வேண்டிய ஏற்பாடுகளேத் தேடுவதும் இவரு டைய பொறுப்பாகும்.

இந்தக் கிராம முனிசீபுக்கு உதவியாக அநேக கிராம வேலேக்காரர்கள் இருக்கிருர்கள். கிரா மம் பெரிதாயிருந்தால் கணக்குப்பிள்ளே (கர்ணம்), தலேயாரி, வெட்டியான் என்கிறவர்கள் அந்த ஊரில் இருப்பார்கள். கணக்கன் முனிசீபுக்கு தீர்வை வசூல்செய்வதில் உதவிபுரிவான். ஏட்டி லோ நோட் புஸ்தகத்திலேயோ கிராமக் கணக்கு களேப் பதிந்து வைத்திருப்பான். கிராம தஸ்தா வேஜுகளே பத்திரமாய்க் காப்பாற்றி வைத்திருப் பதும் அவனுடைய கடமை.

தலேயாரி கிராம முனிசீபு இடுகிற கட்டளே களேத் தண்டோராப் போடுவான். கிராமத்தைப் பாதுகாத்து குற்றவாளிகளேக் கண்டு பிடிப்பான். வெட்டியான் முனிசீப்புக்குத் தபால் கொண்டு வரு வான். அவர் கொடுக்கும் ரிக்கார்டுகளே தாலூகா கச்சேரிக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பான். கிரா மத்தில் வசூல்செய்யும் பணத்தை கிராம முனிசீபு தாலூகா கச்சேரியில் செல்வைத்து ரசீதுபெற்றுக் கொள்வார்.

ரேவினியூ இன்ஸ்பேக்டர்.—கிராம முனிசீபு கிராமத்தில் அதிகாரம் வகிக்கும் விதத்தைப்பற்றி இப்பொழுது படித்தோம். இதேமாதிரியாக ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் ஒரு முனிசீபு அதிகாரம் செலுத்துவார். அநேக ரெவினியூ கிராமங்கள் சேர்ந்தது ஒரு பிர்க்கா. ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஒரு பிர்க்காவில் உள்ள கிராம முனிசீபுகளுக்கு மேல்அதிகாரி. முனிசீபுகள் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்கிறார்களா என்று இவர் விசாரித்து வரவேண்டும். தீர்வைகளை வசூல் செய்யாமலும் பொதுஜன விஷயங்களைக் கவனிக்காமலும் இருக்கும் முனிசீபுகளை மேல்அதிகாரிகள் பார்வைக்கு இவர் கொண்டு வருவார். நமது ஜில்லாவில் 62 இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள்.

தாசில்தார்.—அநேக ரெவினியூ கிராமங்கள் சேர்ந்தது ஒரு பிர்க்கா என்று சொன்னோம். இதுபோலவே அநேக பிர்காக்கள் சேர்ந்துள்ளது ஒரு தாலூகா. இத்தாலூகாவிற்கு ரெவினியூ அதிகாரி தாசில்தார். நமது ஜில்லாவில் ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு தாசில்தார் இருக்கிறார். ஆகவே சேலம் ஜில்லாவில் 10 தாசில்தார்கள் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர டிப்டி தாசில்தார் என்னும் உத்யோகஸ்தர்களும் ஸ்டேஷனரி ஸப் மாஜிஸ்டிரேட் என்னும் உத்யோகஸ்தர்களும் இருக்கிறார்கள். கீழ்க்கூறிய உத்யோகஸ்தர்களுக்கு குற்றவாளிகளை விசாரித்து தண்டனை செய்வதே முக்கியமான கடமை. நமது ஜில்லாவில், சேலம், பரமட்டி, சங்கரி, பெண்ணகரம், ஊத்தங்கரை, தெங்கணிக்கோட்டை, ஏர்க்காடு என்னும் இடங்களில் டிப்டி

தாசில்தாரும் ஹுரூர், சேலம், ஆத்தூர், ராசிபுரம், நாமக்கல், தர்மபுரி, ஓமலூர், திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி என்னும் இடங்களில் ஸ்டேஷனரி சப் மாஜிஸ்டிரேடும் இருக்கிறூர்கள்.

தாசில்தாரின் கடமைகள்.—தாலூகா முக்கிய பட்டணத்தில் தாசில்தார் இருப்பார். அவருடைய கச்சேரியும் அங்கேயே யிருக்கும். தாசில்தார்கள் அடிக்கடி தங்கள் தாலூகாவிலுள்ள பிர்க்காக்களை நேரே பார்வையிட்டு தீர்வைகள் சரியாய் வசூல் செய்யப்பட்டுவருகிறதா என்பதைப் பார்த்துவரவேண்டும். ரெவினியூ சம்பந்தமான சில தாவாக்களை விசாரிக்கவும், குற்றவாளிகளை விசாரித்து தண்டிக்கவும் இவர்களுக்கு அதிகாரம் உண்டு. ரெவினியூ சம்பந்தமாய் குடிகள் கலெக்டருக்கோ அல்லது தங்களுக்கோ மனுக்கொடுத்து தங்கள் குறைகளை முறையிட்டால் தாசில்தாரே அவ்விஷயங்களை விசாரித்துத் தீர்ப்புச் செய்வார். இவர் தாலூகாவில் கவர்ன்மெண்டாருடைய கண்களும் செவிகளும்போல இருக்கிறூர். குடிகளுடைய க்ஷேமத்தையும் கஷ்டநஷ்டங்களையும்பற்றி கவர்ன்மெண்டாருக்கு இவர் அடிக்கடி தெரிவிக்கிறூர். தாசில்தார்கள் தெய்வத்திற்குப் பயந்து தங்கள் வேலையைச் சரிவரச் செய்வார்களானுல் குடிகளுக்கு க்ஷேமம் அதிகரிக்குமென்பதற்குத் தடையில்லை.

டிவிஷனல் ஆபீஸர்கள்.—தாசில்தார்களுக்கு மேல் அதிகாரி டிப்டி கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீசர். சேலம் ஜில்லாவை ஐந்து ரெவினியூ டிவிஷன்களாய்ப் பிரித்திருக்கிறூர்கள். ஒவ்வொரு டிவிஷனும் ஒவ்வொரு டிவிஷனல் ஆபீசரின் அதிகாரத்தின்கீழ் இருக்கிறது. டிவிஷ

னல் ஆபீசரை அவர் அந்தஸ்துக்குத் தகுந்தபடி டிப்டி கலெக்டர் என்றும் சப் கலெக்டரென்றும் அழைக்கப்படும். நமது ஜில்லாவிலுள்ள ரெவினியூ டிவிஷன்கள் பின்வருமாறு: (1) சேலம், ஆத்தூர் என்னும் இரண்டு தாலூகாக்கள் சேர்ந்தது ஒரு டிவிஷன். இதை சேலம் டிவிஷன் என்று சொல்லப்படுகிறது. இந்த டிவிஷன் ரெவினியூ விவகாரங்களைப் பார்க்கும் உத்யோகஸ்தருக்கு, டிப்டி கலெக்டர் என்று பெயர். இவருடைய உத்தியோகஸ்தலம் சேலம். (2) நாமக்கல், இராசிபுரம், தாலூகாக்கள் சேர்ந்தது நாமக்கல் டிவிஷன். இங்கே ஒரு டிப்டி கலெக்டர் இருக்கிறார். நாமக்கல் இவருக்கு இருப்பிடம். (3) ஓமலூர் தாலூகாவும், திருச்செங்கோடு தாலூகாவும் சேர்ந்தது சங்கரிதுர்க்கம் டிவிஷன். இதை மேல்பார்க்கும் டிப்டி கலெக்டர் சங்கரிதுர்க்கத்திலிருக்கிறார். (4) தர்மபுரி தாலூகாவும் ஊத்தங்கரைத் தாலூகாவும் சேர்ந்தது தர்மபுரி டிவிஷன். இந்த டிவிஷனின் விவகாரங்களைக் கவனிக்கும் டிப்டி கலெக்டர் தர்மபுரியில் தங்குவார். (5) ஹோசூர் டிவிஷன் ஹோசூர் தாலூகாவும், கிருஷ்ணகிரி தாலூகாவும் சேர்ந்த டிவிஷன். ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறிய ஒரு சப் கலெக்டர் அதிகாரத்திற்குள் இது அடங்கியது. இந்த உத்யோகஸ்தரின் கச்சேரி ஹோசூரில் இருக்கிறது.

இவர்களைத்தவிர நமது ஜில்லாவில் மற்றொரு டிவிஷனல் ஆபீசர் இருக்கிறார். அவர் சேலத்தில் தங்குகிறார். இவர் கஜானா சம்பந்தமாயுள்ள விஷயங்களைக் கவனிக்கிறார். இவருக்கே "டிரெஷரி டிப்டி கலெக்டர்" என்று பெயர்.

டிவிஷனல் ஆபீசர்கள் தங்கள்தங்கள் டிவிஷனில் உள்ள தாசில்தார்கள் சரியாய் வேலை செய்து வருகிறார்களாவென்று பார்த்துவரவேண்டும். தங்கள் டிவிஷனைச் சேர்ந்த தாசில்தார்கள் விசாரித்த கேசுகளை இவர்கள் அப்பீல் ரூபமாய் விசாரிக்கலாம். குற்றவாளிகளைத் தண்டிக்கவும் அவர்களை விடுதலை செய்யவும் இவர்களுக்கு அதிகாரமுண்டு. கிராம அதிகாரிகளை நியமிக்கவும் அவர்களை வேலையினின்று விலக்கும் அதிகாரத்தையும் இவர்கள் அடைந்தவர்கள். டிவிஷனல் ஆபீசர்களுக்கு மேல்அதிகாரி ஜில்லா கலெக்டரே.

போலீஸ் இலாகா.—நமது ஜில்லாவில் கலெக்டருக்கு உதவியாயிருந்து சண்டை, சச்சரவு, களவு இல்லாமலும் ஊரில் குழப்பமின்றி சமாதானம் பரவியிருப்பதற்கும் இந்த இலாகா உத்யோகஸ்தர்களே ஜவாப்தாரிகள். இந்த இலாகாவிற்கு ஜில்லாத்தலைவர் சூப்ரண்டெண்டெண்டு ஆப்-போலீஸ். இவர் டிஸ்டிரிக்ட்மாஜிஸ்ட்ரேட் அதாவது கலெக்டருடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர். இவருக்குத் துணையாக அநேக உத்யோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவருக்கு டிப்டி-சூப்ரண்டெண்டெண்டு என்று பெயர். இவர் அநேகமாய் சேலத்தில் தங்குவார். மற்றொருவருக்கு அஸிஸ்டெண்டு சூப்ரண்டெண்டெண்டு என்று பெயர். இவருடைய உத்யோகஸ்தலம் ஷோஸூர்.

போலீஸ் அதிகாரத்திற்காக சேலம் ஜில்லாவை அநேக வட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இவருக்கே ‘சர்க்

கில் இன்ஸ்பெக்டர்' என்று பெயர். நமது ஜில்லா வில் மொத்தம் பத்து வட்டங்கள் இருக்கின்றன. அவைகள் பின்வருமாறு: (1) சேலம் டவுன், (2) சேலம் தாலூகா, (3) ஆத்தூர், (4) திருச்செங் கோடு, (5) மேலூர், (6) நாமக்கல், (7) கிருஷ் ணகிரி, (8) ஹோசூர், (9) தர்மபுரி, (10) ஹரூர். இப்பத்து வட்டங்களுக்கும் பத்து சர்க்கில் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். மேலும் ரிசர்வ் சர்க்கில் இன்ஸ்பெக்டர் ஒருவர் சேலம் டவுனிலிருக்கிறார். ஒவ்வொரு சர்க்கில் இன்ஸ் பெக்டரின்கீழ் நாலு அல்லது ஐந்து சப் இன்ஸ் பெக்டர்கள் இருக்கிறார்கள். நமது ஜில்லாவில் மொத்தம் 50 சப் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார் கள். சப் இன்ஸ்பெக்டர்களுக்குக் கீழ் உள்ளவர் கள் ஹெட்கான்ஸ்டேபில்கள். அவர்களுக்குக் கீழ் கான்ஸ்டேபில்கள் இருக்கிறார்கள். போலீஸ் இலாகா இல்லாமற்போனால் ஜில்லாவில் கொலை, களவு மிகுதியாய் நேரிடும் என்பதை உங்களில் அநேகர் உணர்த்துகொண்டிருக்கலாம்.

நியாய இலாகா.—ஜனங்களுக்குள் வழக்கு ஏற் பட்டுவிட்டால் அதைத் தீர்த்துவிடவேண்டியது. அரசனுடைய முக்கியமான கடமைகளில் ஒன்று. நமது ஜில்லாவில் அவ்விதமான வழக்குகளைத் தீர்க்கும்பொருட்டு அநேக நியாயஸ்தலங்கள் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் மேல் அதி காரியாயிருப்பவர் 'ஜில்லா ஜட்ஜ்'. வழக்கில் இரண்டுவிதம் உண்டு. நிலம், பணம், லேவா தேவி முதலியவைகளால் ஏற்படக்கூடிய வழக்கு களுக்குச் சிவில் வியாஜ்ஜியம் என்று பெயர். அடிபிடி சண்டை, கொலை, கலகம் முதலியவைக ளால் ஏற்படக்கூடிய வழக்குகளுக்கு கிரிமினல்

வியாஜ்ஜியங்கள் என்று சொல்வது. இந்த இரண்டுவகையான வழக்குகளையும் விசாரித்து தீர்ப்புச் சொல்ல ஜில்லா ஜட்ஜுக்கு அதிகாரம் உண்டு. கொலை, களவு, தீவட்டிக்கொள்ளை முதலிய அக்கிரமங்களைச் செய்தவர்களை விசாரிக்கும்பொழுது இவருக்கே 'செஷன்ஸ் ஜட்ஜ்' என்று பெயர். இவ்விதமாக குற்றங்கள் சம்பந்தப்பட்ட கேசுகளை விசாரிக்கும் பொழுது ஜட்ஜுக்கு உதவியாக 'ஜூரர்கள்' அல்லது 'அஸெஸர்கள்' என்னும் சிலர் கேஸைக் கவனித்து தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுவார்கள். 'ஜூரர்கள்' அபிப்பிராயத்தை ஜட்ஜ் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியம். ஆனால் 'அஸெஸர்கள்' அபிப்பிராயத்தை ஜட்ஜ் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியமில்லை.

சிவில் வழக்குகளை விசாரிப்பதற்காக ஜில்லா ஜட்ஜுக்கு உதவியாக அநேக கீழ் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். கிராம அதிகாரியாகிய கிராமமுனிசீபுக்கு இருபது ரூபாய் வரையில் உள்ள சிவில் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் உண்டு என்று முன்னமே சொன்னோம். இவருக்கு மேல் 'டிஸ்டிரிக்ட் முன்சீப்' என்று ஒரு நியாயாதிபதி இருக்கிறார். இவருக்கு மூவாயிரம் ரூபாய் வரையிலுள்ள கேசுகளை விசாரித்துத் தீர்ப்புச்சொல்ல அதிகாரம் உண்டு. நமது ஜில்லாவில் இவ்விதமான உத்யோகஸ்தர்கள் ஐந்து பேர்கள் இருக்கிறார்கள். சேலத்தில் இரண்டு முன்சீப் கோர்ட்டுகள் இருக்கின்றன. இவைகளில் ஒன்றுக்கு சங்ககிரி முன்சீபு கோர்ட்டு என்று பெயர். மற்ற மூன்று கோர்ட்டுகள் கிருஷ்ணகிரியிலும் நாமக்கல்லிலும் தர்மபுரியிலும் இருக்கின்றன. கிருஷ்ணகிரியிலிருக்கும் முன்சீபு ஒவ்

வொரு வருஷத்திலும் சில மாதங்களில் ஹோசூருக்குச் சென்று அங்கே கோர்ட்டு நடத்துவார். டிஸ்டிரிக்ட் முன்சீபு சொல்லும் தீர்ப்பை ஒப்புக்கொள்ளாத கக்ஷிக்காரர்கள் அவருக்கு மேலதிகாரியாகிய சப் ஜட்ஜி என்னும் நியாயாதிபதியிடம் அப்பீல் செய்யலாம். நமது ஜில்லாவில் ஒரே சப் ஜட்ஜு-தான் இருக்கிறார். இவருடைய கோர்ட்டு சேலத்திலிருக்கிறது.

இனி கிரிமினல் வழக்கைப்பற்றிப் படிப்போம். கிராம அதிகாரிக்கு சில குற்றவாளிகளைத் தண்டிக்க அதிகாரம் உண்டென்று முன் உரைத்தோம். அநேக தாசில்தார்களுக்கு குற்றவாளிகளைத் தண்டிக்கவோ, அல்லது கைதிகளின்மேல் குற்றம் சாற்றி அவர்களை மேல் அதிகாரியான டிப்டி கலெக்டருடைய விசாரணைக்கு உட்படுத்தவோ அதிகாரம் உண்டு. அப்படி அவர்கள் செய்யுங்கால் அவர்களுக்கு சப் மாஜிஸ்டிரேட் என்று பெயர். ராஜத்துரோகம், சண்டை முதலிய கிரிமினல் கேசுகளை டிப்டி கலெக்டராவது, கலெக்டராவது விசாரிப்பார். டிப்டி கலெக்டர்கள் கிரிமினல் கேசுகளை விசாரிக்கும்பொழுது அவர்களுக்கு டிவிஷனல் மாஜிஸ்ரேட்டுகள் என்று பெயர். இவ்விதம் கலெக்டர் கிரிமினல் கேசுகளை விசாரிக்கும்பொழுது அவரை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் என்று அழைக்கிறோம்.

துரைத்தனக்கட்டிட இலாகா (Public works Department).—பாலங்கள் கட்டுவதற்கும் அநேக நீர் பாய்ச்சல்களை ஏற்படுத்தி விவசாயம் செய்பவர்களுக்கு சவுகரியம் செய்யும் பொருட்டும், சர்க்காருக்கு வேண்டிய அநேக கட்டிடங்களைக் கட்டும்பொருட்டும் இந்த இலாகா ஏற்பட்டது. இந்த

இலாகாவைச்சேர்ந்த அநேக உத்யோகஸ்தர்கள் நமது ஜில்லாவில் இருக்கிறார்கள். இந்த இலாகா விற்குத் தலைவர் சென்னையிலிருக்கும் 'சீப் இஞ்சி னீயரே'. இவருக்குக்கீழ் அதிகாரி 'சூப்ரண்டெண் டிங் இஞ்சினீயர்'. இவருடைய மேற்பார்வை யின்கீழ் அநேக ஜில்லாக்கள் அடங்கியுள்ளன. நமது ஜில்லாவிலிருக்கும் இந்த இலாகா ஆபீச ருக்கு 'எக்ஸிகியூடிவ் இஞ்சினீயர்' என்று பெயர். இவருக்கும் கீழ் உத்யோகஸ்தர்களை சப் இஞ்சி னியரென்றும் ஓவர்சியரென்றும் அழைக்கிறோம்.

பத்திரப்பதிவு இலாகா.—நாம் ஒரு நிலத்தை அல்லது வீட்டை மற்றொருவனுக்கு விற்றாலா வது அல்லது அடமானம் வைத்துப் பணம் வாங்கினாலாவது என்ன செய்கிறோம். சர்க்கார் விற்றுவரும் முத்திரைக் காயிதங்களை வாங்கி அவைகளில் விஷயங்களை எழுதி ஒரு சப் ரிஜி ஸ்ட்ரார் ஆபீசுக்குக் கொண்டுபோய்ப் பத்திரங்க ளைப் பதிப்பிக்கிறோம். பின்னால் ஒருவருக்கொ ருவர் மோசம் செய்யாமலிருக்கும் பொருட்டே இப்படிச் செய்கிறோம். பத்திரங்களைப் படித்து அவைகள் சரியாயிருந்தால் பின்பு அவைகளைப் பதியும் இலாகாவிற்கே 'ரிஜிஸ்ட்ரேஷன் இலா கா' என்று சொல்வது. நமது ஜில்லாவில் இந்த இலாகாவிற்குத் தலைவர் 'டிஸ்டிரிக்ட்டு ரிஜிஸ்ட் ரார்'. இவர் சேலத்தில் தங்குகிறார். இவர் பத்திர சம்பந்தமாய் ஏற்படக்கூடிய தாவாக்களைக் கவ னித்தும் தானே சில உயர்ந்த பத்திரங்களை பதிப் பித்தும் ஜில்லாவில் மற்ற இடங்களில் உள்ள பத் திரப்பதிப்பு ஆபீஸுகளை மேற்பார்த்தும் வருகி றார். நமது ஜில்லாவில் இந்த இலாகாவைச் சேர்ந்த ஆபீசுகளின் தொகை 26. சேலம் தாலூ

காவில் சேலம், செவ்வாய்ப்பேட்டை, வளப்பாடி என்னும் ஊர்களிலும்; ஓமலூர் தாலூகாவில் ஓமலூர், மேச்சேர், எடப்பாடி என்னும் இடங்களிலும்; தர்மபுரி தாலூகாவில் தர்மபுரி, பாலக்காடு, பெண்ணுகரம் என்னும் இடங்களிலும்; கிருஷ்ண கிரித் தாலூகாவில் கிருஷ்ணகிரியிலும்; ஊத்தங் கரைத் தாலூகாவில் ஊத்தங்கரை, ஹரூர் என்னும் ஊர்களிலும்; ஆத்தூர் தாலூகாவில் ஆத்தூர், கங்கவல்லி என்னும் ஸ்தலங்களிலும்; ஹோசூர் தாலூகாவில் ஹோசூர், தெங்கணிக் கோட்டை என்னும் கிராமங்களிலும்; ராசிபுரம் தாலூகாவில் ராசிபுரம், நாமகிரிப்பேட்டை என்னும் இடங்களிலும்; நாமக்கல் தாலூகாவில் நாமக் கல், பரமத்தி, சேந்தமங்கலம், புதுச்சத்திரம் என்னும் ஊர்களிலும்; திருச்செங்கோடு தாலூகாவில் திருச்செங்கோடு, சங்ககிரி, மல்லசமுத்திரம் என்னும் இடங்களிலும்; ஒவ்வொரு சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் இருக்கிறது. சேலம் டவுனில் ஜில்லா ரிஜிஸ்டிரார் ஆபீஸ் இருக்கிறது.

காட்டு இலாகா.—காடுகள் இருப்பதினால் நமக்கு எவ்வளவு பிரயோஜனமென்று ஒரு அத்தியாயத் தில் படித்தோம். காடுகளில் மரம் வெட்டுவதற்கும் ஆடுமாடுகளை மேய்ப்பதற்கும் காட்டு விளைபொ ருள்களைச் சேகரிப்பதற்கும் சர்க்காருக்கு நாம் வரி தரவேண்டும். அவ்வரிகளை வசூல் செய்வதற்கும், காடுகளைப் பாதுகாப்பதற்கும் இந்த இலாகா ஏற் பட்டது.

சென்னை ராஜதானியில் உள்ள காட்டுப்பிர தேசங்கள் மூன்று வட்டங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன. வடக்கு வட்டம், நடு வட்டம், தென் வட்டம் என்று அவைகளுக்குப் பெயர்.

இம்மூன்று வட்டங்களையும் மேல்பார்த்துவரும் உத்யோகஸ்தர் சென்னையில் இருக்கிறார். அவருக்குத்தான் 'சீப் கான்ஸர் வேட்டர்' என்று பெயர். ஒவ்வொரு வட்டத்திற்கும் அதிகாரி 'கான்ஸர் வேட்டர்'. சேலத்தில் வட்ட அதிகாரியாகிய ஒரு 'கான்ஸர் வேட்டர்' இருக்கிறார். நமது ஜில்லாவிலிருக்கும் காட்டுப் பிரதேசங்களை மூன்று பிரிவுகளாகப்பிரித்திருக்கிறார்கள். ஒரு பிரிவு வடக்கிலும் மற்றொரு பிரிவு தெற்கிலும் மூன்றாம் பிரிவு மத்தியிலும் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பாரெஸ்டு ஆபீஸர் இருக்கிறார். பாரெஸ்டு ஆபீஸருக்குக்கீழ் 'ரேஞ்சர்களும்', இவர்களுக்குக்கீழ் பாரெஸ்டார்களும், கார்டுகளும் இருக்கிறார்கள்.

கல்வி இலாகா.—நமது ஜில்லாவிலிருக்கும் பள்ளிக்கூடங்களில் அநேகம் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுடைய பேருதவியாலேயே நடைபெற்று வருகின்றன. அவைகளில் பாடம் பிள்ளைகளுக்குச் சரியாய்ச் சொல்லிக்கொடுக்கிறார்களா, தகுந்த உபாத்தியாயர்களை அப்பள்ளிக்கூடங்களில் நியமித்திருக்கிறார்களா, கல்வி அபிவிருத்திக்கென்று கொடுக்கும் பணத்தைச் சரியாகச் செலவழிக்கிறார்களாவென்று விசாரித்து வர கல்வி இலாகா ஏற்பட்டது. நமது ஜில்லாவிலிருக்கும் இந்த இலாகாத் தலைவருக்கு "டிஸ்டிரிக்ட்டு எடுகேஷனல் ஆபீசர்" என்று பெயர். இவருக்குக் கீழ் உத்யோகஸ்தர்கள் அவருக்கு உதவியாயிருந்து ஜில்லாவிலுள்ள பள்ளிக்கூடங்களையெல்லாம் மேல்பார்த்து வருகிறார்கள். இவர்களுக்கு டிப்டி இன்ஸ்பெக்டர்கள் என்று பெயர்.

மேற்கூறிய இலாகாக்களைத் தவிர, இதர இலாகாக்களும் அவைகளைச் சேர்ந்த உத்யோகஸ்தர்

களும் நமது ஜில்லாவிலிருக்கிருர்கள். 'எக்ஸைஸ்' இலாகாவைச் சேர்ந்த உத்யோகஸ்தர்கள் சர்க்கார் அனுமதியில்லாமல் யாவரும் சாராயம் காய்ச்சாமலும் பனே, தென்னே முதலிய மரங்களிலிருந்து கள்ளே இறக்காமலும் தடுத்துவருகிருர்கள். கள்ளுக்கடை வைப்பதற்கும் இவர்களுடைய அனுமதிவேண்டும். இந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள் போலீஸ் உத்யோகஸ்தரைப்போல உடை தரிப்பார்கள்.

தந்தி தபால்.—இந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள் இந்த இலாகா விவகாரங்களேக் கவனிக்கிருர்கள். தபால்காரன் நமது கடுதாசிகளேக் காலதாமதமின்றிக் கொடுக்காமற்போனுலும் அவர்கள் மூலமாய் வேறு என்ன குற்றங்கள் ஏற்பட்டாலும் நாம் இந்த இலாகாவைச் சேர்ந்த 'சூப்ரெண்டெண்டுக்கு விண்ணப்பம் செய்தால் அவர் உடனே அவருக்குக் கீழ் அதிகாரியாகிய 'இன்ஸ்பெக்டரை' விசாரிக்கச்செய்து முடிவை நமக்கு அறிவிக்கிருர்.

விவசாய இலாகாவைச் சேர்ந்த உத்யோகஸ்தர்களேயும், ஆஸ்பத்திரிகளே போஷணே செய்யும் உத்யோகஸ்தர்களேயும், மாடு, குதிரை முதலிய ஜந்துக்களுக்கு மருந்துகொடுத்து அவைகளே குணப்படுத்தும் இலாகாவைச் சேர்ந்த ஆபீசர்களேயும், ஜெயிலில் அடைபட்ட கைதிகளின் விஷயங்களே கவனிக்கும் உத்யோகஸ்தர்களேயும் நமது ஜில்லாவில் காணலாம்.

ஜில்லா அரசாட்சியும், வருமானமும்.-சேலம் ஜில்லாவைச்சேர்ந்த அநேக இலாகா உத்யோகஸ்தர்களுக்கு சர்க்கார் மாதாமாதம் சம்பளம் தவருமல் கொடுக்கிருர்கள். இல்லாவிடில் அரசாட்சி நடைபெருது. ஆனுல் சர்க்காருக்கு எங்கிருந்து பணம்

வருகிறது? வரிமூலமாய் ஜனங்களிடமிருந்து சர்க்கார் உத்யோகஸ்தர்கள் பணம் வாங்கிக் கஜானுவில் சேர்க்கிறுர்கள். இப்பணத்தைக்கொண்டே ஜில்லா அரசாட்சி நடைபெறுகிறது. கீழ்க்கூறியவைகளே முக்கியமான வருமானங்கள்: (1) நிலவரி, (2) ஸ்டாம்பு, (3) கள்ளு, சாராயவரி, (4) வருமானவரி, (5) காடுகளின் மூலமாய் ஏற்பட்ட வருமானம், (6) பத்திரம் விற்பனே, (7) அபின்.

## ஸ்தலக் குடியாட்சி

ரிப்பன் பிரபு அளித்த சட்டம்.—இங்கிலீஷ்காரர்கள் நமது தேசத்தைக் கொண்டதுமுதல் ஜனங்களுக்கு வேண்டிய சவுகரியங்களே அவர்களே செய்துவந்தார்கள். ஆனல் ராஜப்பிரதிநிதியாகிய பெருமைவாய்ந்த ரிப்பன் பிரபு இந்த விஷயங்களே ஜனங்கள் தாங்களே பார்த்துக்கொள்ளலாமென்று கருதி இக்கருத்துக்கொப்ப, கி. பி. 1844-ல் ஒரு சட்டத்தையும் ஏற்படுத்தினுர். இதன்படிக்கு கிராமத்தில் யூனியன் சபையும், பட்டணங்களில் முனிசிபாலிடியும், தாலூகாக்களில் தாலூகா போர்டும், ஜில்லா முழுதைக்கும் ஜில்லா போர்டும் ஏற்பட்டிருக்கின்றன.

கிராம பஞ்சாயத்து.—இது சிறிய கிராமங்களில் ஐந்துபேர் கூடிய சபை. இவர்கள் கிராமப் பொது விஷயங்களேக் கவனிப்பார்கள். பஞ்சாயத்தார்களே அநேகமாய் ஜனங்களே தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள் செய்யும் காரியங்களாவன: கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருத்தல், குளம் குட்டைகளேப் பாதுகாத்தல், தொத்துவியாதிவந்தால் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி வியாதி பெருகாவண்ணம் தடுத்தல் முதலியன.

யூனியன்.—இது ஒரு கிராம பரிபாலனசபை. அநேகமாய் 5,000 ஜனங்களுக்கு மேலிருக்கும் ஊரிலேயே யூனியன் ஏற்படுத்தப்படும். கிராம அதிகாரி இந்தச் சபையில் அங்கத்தினரா யிருப்பார். சில மெம்பர்களை ஜனங்களே தேர்ந்தெடுப்பார்கள். சிலரை சர்க்கார் நியமிப்பார்கள். யூனியன் மெம்பர்கள் தங்களில் ஒருவரை சேர்மனாகத் தேர்ந்தெடுப்பார்கள். சேர்மனும் மெம்பர்களும் சேர்ந்து கிராம விவகாரங்களை நடத்துவார்கள்.

யூனியன் சபையார் செய்யவேண்டிய காரியங்கள் பின்வருமாறு: ஊரையும் தெருக்களையும் சுத்தமாய் வைத்திருத்தல், வீதிகளில் அங்கங்கே விளக்குகளை அமைத்து அவைகளை இராக்காலங்களில் தவருமல் ஏற்றிவருதல், ஊரில் ஜலதாரைகளைக் கட்டி அழுக்கு நீரை ஊருக்கு வெளியே கடத்துதல், தொத்துவியாதி வராவண்ணம் சுகாதாரவிதிகளை அனுசரித்தல், அப்படி ஏதாவது வியாதி வந்துவிட்டால் ஜனங்களுக்கு மருந்து கொடுத்து உதவுதல், வீட்டு கக்கூசுகளை நாள்தோறும் சுத்தி செய்ய ஏற்பாடு செய்தல்.

மேற்கூறிய காரியங்களைச் செய்யும்பொருட்டு யூனியன் சபையார் ஜனங்களிடமிருந்து அநேக வரிகளை வசூல் செய்யலாம்; அதாவது வீட்டுவரி, வண்டிவரி, பந்தல்வரி, சந்தைவரி முதலியன. யூனியன் சபை கூடுவதற்கு ஒரு கச்சேரியுண்டு. இச்சபையின்கீழ் வேலைசெய்கிறவர்களில் முக்கியமானவர்கள்: வரிவசூல்செய்யும் தண்டற்காரனும், ஸானிடெரி இன்ஸ்பெக்டருமே. அநேக சில்லரை வேலைக்காரர்களும் உண்டு. நமது ஜில்லாவில் 40 யூனியன்கள் இருக்கின்றன. நாமக்கல் தாலுகாவில் மாத்திரம் 12 யூனியன்கள் இருக்கின்றன.

முனிசிபாலிடி.—இது நகரச்சங்கம். பெரிய பட்டணங்களில்தான் இச்சங்கம் இருக்கும். நமது ஜில்லாவில் சேலத்தில்தான் இச்சங்கம் இருக்கிறது. யூனியன் சபை கிராமவிவகாரங்களை எப்படி கவனிக்கின்றதோ அதேமாதிரியாக நகரச்சங்கம் நகர விவகாரங்களைக் கவனிக்கும். இச்சங்கத்து மெம்பர்கள் அநேகரை வரிசெலுத்தும் ஜனங்களே தேர்ந்தெடுப்பர்; சிலரை கவர்ன்மெண்டார் நியமிப்பார்கள். இச்சங்கத்திற்குத் தலைவர் சேர்மன். இவரை சேலம் முனிசிபல் சபையார் தாங்களே தேர்ந்தெடுக்கிறார்கள். நகரபரிபாலனத்தின் பொருட்டு முனிசிபல் சபையார் அநேக வரிகளை ஜனங்களிடமிருந்து வசூல்செய்கிறார்கள். இவைகளில் வீட்டுவரி, தண்ணீர்வரி, கக்கூஸ்வரி, தொழில்வரி, வண்டிவரி முக்கியமானவை. ஒரு முனிசிபல் சபை பின்வரும் காரியங்களை பொதுஜன சவுக்கியத்தின்பொருட்டு செய்துவருகின்றன. நகரத்தில் ஜல்லிரஸ்தா போடுவதும், அந்த ரஸ்தாக்களில் இருவேளையிலும் தண்ணீர் தெளிப்பதும், ரஸ்தாக்களில் சாலைகளை வைப்பதும், ஜனங்களுக்குக் குழாய் வழியாய் நல்ல தண்ணீரைக் கொடுப்பதும், வீதிகளில் விளக்குப்போடுவதும், ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி ஜனங்களுக்கு மருந்து கொடுத்து உதவுவதும், கல்விச்சாலைகளை ஏற்படுத்தி ஆண் பெண் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்துக்கொடுப்பதும், பட்டணத்திற்கு நடுவில் சிங்காரவனங்களைப் பயிர்செய்து காற்றைச் சுத்தப்படுத்துவதும், தொத்து வியாதி வராமல் தடுப்பதுவும் முனிசிபாலிடியின் முக்கிய கடமைகளாம்.

தாலூகா போர்டுகள்.—கிராமப் பொதுஜன விஷயங்களை யூனியன் சபையார் கவனிப்பதுபோல்

ஒரு தாலூகாவின் விஷயங்களைக் கவனிக்க தாலூகா போர்டு இருக்கிறது. நமது ஜில்லாவில் ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனைச் சேர்ந்த தாலூ காக்களுக்கு ஒரு தாலூகா போர்டு இருக்கிறது. ஆகவே சேலம் ஜில்லாவில் 5 தாலூகா போர்டு கள் இருக்கின்றன.

ஜில்லா போர்டு.—இது ஜில்லாமுழுவதும் சம் பந்தமான விஷயங்களை கவனிப்பதற்காக ஏற்படுத் திய சபை. இச்சபை அங்கத்தினர்கள் அநேக ரைத் தாலூகாபோர்டு மெம்பர்களே தேர்ந்தெடுக் கிறார்கள். சிலரை கவர்ன்மெண்டார் நியமிப் பார்கள். இச்சபையார்களுக்குள் ஒருவரை பிரசி டெண்டாக தேர்ந்தெடுப்பது வழக்கம்.

தாலூகா போர்டுகளும், ஜில்லா போர்டும்.— தாலூகா போர்டு மெம்பர்களை வரிசெலுத்து வோர்களே தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள் தங் களுக்குள் ஒருவரை பிரசிடெண்டாகவும், மற் றொருவரை வைஸ் பிரசிடெண்டாகவும் நியமிப் பார்கள். தாலூகா போர்டுகளும் ஜில்லா போர் டும் செய்யவேண்டிய கடமைகள் அநேகமாய் ஒரேமாதிரியாய் இருக்கும். அவைகளில் சிலவற் றைச் சுருக்கமாய்ச் சொல்லுவோம்.

ஜில்லா போர்டு செய்யவேண்டிய காரியங்க ளாவன: ஜில்லாவில் பெரிய பாட்டைகளை ஏற் படுத்தி அவைகளை பராமரித்துவருதல்; வாரா வதிகளையும், சிறிய பாலங்களையும் கட்டுதல்; பிர யாணிகள் தங்குவதற்கு பங்களாக் கட்டுதல்; பாட் டைகள் ஓரங்களில் மரங்களை நட்டு அவைகளைப் பாதுகாத்து வருதல்; போக்குவரவு சாதனங்களை ஏற்படுத்துதல்; ஆஸ்பத்திரிகளைக் கட்டுதல்; தாதிகள், மருத்துவச்சிகள், அம்மைகுத்துவோர்

கள் ஆகிய இவர்களைப் பழக்கி வேண்டும்போது தாலூகாக்களுக்கு அனுப்புதல்; உயர்தரக் கலாசாலைகளை (ஹைஸ்கூல்களை) ஏற்படுத்துதல் முதலியன. ஜில்லா போர்டைச் சேர்ந்த முக்கிய உத்யோகஸ்தர்கள் போர்டு இஞ்சினீயரும் ஹெல்த் ஆபீஸருமே.


ஜில்லா போர்டு வருமானம்.—மேற்கூறிய கடமைகளைச் சரிவர நடத்துவதற்குப் பணம்வேண்டுமல்லவா? கீழ்க்கூறியுள்ள பாவத்துக்கள் மூலமாய் ஜில்லா போர்டுக்கு பணம் சேருகிறது: நிலவரி, ரயில்வரி, லைசென்சுக்காக கொடுக்கப்படும் கட்டணங்கள்; பாடசாலைகளின்மூலம் வரும்படி; இனும்களிலிருந்தும் ட்ரஸ்டு (trust) களிலிருந்தும் கிடைக்கும் வரும்படி, அபராதங்களும் தண்டத்தொகைகளும்; சாலைமரங்களின் மூலமாய் ஏற்படும் வரும்படி முதலியன.

தாலூகா போர்டின் கடமைகள்.-தாலூகா போர்டின் கடமைகள் ஜில்லா போர்டின் கடமைகளைப் போலவேயாம். ஆனல் தாலூகா போர்டுகள் உயர்தரக் கலாசாலைகளை ஏற்படுத்தாமல் மூலாதார (எலிமெண்டரி)ப் பாடசாலைகளையே ஏற்படுத்துகின்றன. வரும்படியும் ஜில்லா போர்டுக்கு வருவதுபோல வந்துசேருகின்றன.

இன்ஸ்பெக்டர்-ஜெனரல்-ஆப்-லோகல் போர்ட்ஸ்.—மேற்கூறிய முனிசிபாலிடிகளும் லோகல் போர்டுகளும், யூனியன்களும் தத்தம் கடமைகளைச் சரியாய்ச் செய்துவருகின்றநதா என்று விசாரித்துவர ஒரு உத்யோகஸ்தரைத் துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கிருர். அவருக்கே இன்ஸ்பெக்டர் ஜெனரல்-ஆப்-லோகல் போர்ட்ஸ் என்று பெயர்.

DIOCESAN PRESS, MADRAS—1931. B 181.

59110



சேலம் ஜில்லா
0 6 12
ரயில்பாதை
ரஸ்தாக்கள்
தாலூகா எல்லை
77° 30'
78°
78° 30'
13°
12° 30'
12°
11° 30'
11°
கிருஷ்ணகிரி
ஊத்தங்கரை
தர்மபுரி
மொரப்பூர்
தோப்பூர்
பொம்மிடி
மேச்சேரி
ஓமலூர்
சேலம்
அயோத்தியாபட்டணம்
ஆத்தூர்
தலைவாசல்
எடப்பாடி
சங்கரி
பவானி
குமாரபாளையம்
திருச்செங்கோடு
ஈரோடுக்கு
இராசிபுரம்
சேந்தமங்கலம்
நாமக்கல்
பரமத்தி
மோகனூர்
பென்னாகரம்
பெரும்பாலை
அதமன்கோட்டை
காவேரிபட்டணம்
திருப்பத்தூருக்கு